Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு

இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)





முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 13 புதன்கிழமை (28.11.2012) பக்கங்கள் 20 ஓசை – 059












# ஐ.நா.வை வெளியேற்றியது தவறு; சாடுகிறார் யாழ். வந்த ஐ.நா. அதிகாரி



யுத்தம் நடைபெற்ற காலத்தில் எமது பணியாளர்களை அப்பகுதியில் இருந்து வெளி யேற்றியது தவறு. அதற்காக தாம் வருந்துகிறோம். இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகளை விடமாட்டோம் என்று ஐ.நா.வின் தெற்காசிய மற்றும் பசுபிக் நாடுகளுக்கான சிரேஷ்ட அரசியல் செயலாளர் ஹிட்டோக்கி டென் தெரி வித்தார்.

யாழ் மாவட்டத்தின் அரசியல் நிலைமைகள் மற்றும் மக்களின் தேவைகள் குறித்து ஆராய்ந்து அறிவதற்காக யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஐ.நா.வின் ஆசிய மற்றும் பசுபிக் அரசியல் விவகாரக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், நேற்று யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் பொதுமக்களுக்கு உதவி செய்யாமல் ஐ.நா. தனது பணியாளர்களை வன்னியில் இருந்து வெளியேற்றியதற்கு ஆயர் தனது வருத்தத்தை இதன்போது தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த ஹிட்டோக்கி டென், வன்னியில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்கள் பற்றி ஏதோ ஒரு வகையில் தாங்கள் அறிவதாகவும் இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகளை விடமாட்டோம் என்றும் கூறினார். நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரச் செயலாளர்

19 ஆம் பக்கம் பார்க்க

## சரவணபவன் எம்.பி. மீது கல்வீச்சு யாழ். பல்கலைக்கழக சூழலில் பதட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை யாழ். பல்கலைக்கழக சூழல் பதட்டமும் பரபரப்புமாகக் காணப்பட்டது. அப்போது அப்பகுதிக்குள் நுழைந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கல்வீச்சுத் தாக்குதலுக்கு உட்பட்டார். அப்பகுதியில் கடமையில் இருந்த படையினருக்கும் பல்கலைக்கழக விடுதியில் இருந்த மாணவர்களுக்குமிடையில் நேற்று மாலை முறுகல் நிலை காணப்பட்டது. யாழ். பல்கலைக்கழக சூழல் நேற்று மாலை பதட்டமான சூழலுக்குள் சிக்கிக்கொண்டது. பல்கலைக்கழகத்தின் விடுதிக்குள் மாணவர்கள் குழுமியிருந்தனர். விடுதியைச் சூழ பொலிஸாரும் படையினரும் காணப்பட்டனர். இருதரப்புக்குமிடையில் முறுகல் நிலை காணப்பட்டது. பொழுது கருகும் வேளையில் மாணவர் விடுதிக்குள் தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தன. இதனால் பதட்டம் மேலும் அதிகரித்தது. இருதரப்புக்கும் இடையில் முறுகல் நிலைமுற்றி மேலும் வலுவடைந்தது. விடுதியை நோக்கி

19 ஆம் பக்கம் பார்க்க

## வங்கக் கடலில் தாழமுக்கம் மழை பொழியும் வாய்ப்பு

இலங்கைக்கு மிக அருகே வங்கக்கடலில் புதிய குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது. இதனால் தென் தமிழகக் கடலோரப் பகுதிகளிலும் இலங்கையின் வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளிலும் லேசான மழைபெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆய்வுமையம் வெளியிட்ட அறிக்கையில்,

19 ஆம் பக்கம் பார்க்க

## விண்வெளிக்குச் சென்றது செயற்கைக் கோள்

### கன்னி முயற்சி வெற்றி

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது தொலைத்தொடர்பு செயற்கைக் கோளான (சற்றலைட்) சுப்றீம் செற் நேற்று பிற்பகல் 3.43 மணிக்கு விண்ணுக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டது.

சீனாவின் சீசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்தே இந்தச் செயற்கைக்கோள் ஏவப்பட்டதாக சுப்றீம்செட் நிறுவனம் அறிவித்தது. கடந்த 22 ஆம் திகதி ஏவப்படவிருந்த மேற்படி

19 ஆம் பக்கம் பார்க்க

## இன்று சந்திர கிரகணம்

சந்திரகிரகணமொன்றைக் காணும் வாய்ப்பு இலங்கையர்களுக்கு இன்று கிட்டவுள்ளது. இரவு இந்தச் சந்திரகிரகணம் தென்படும் என வானியல் நிபுணர் கலாநிதி காவன் ரத்னதுங்க தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், இந்த சந்திர கிரகணத்தின் போது

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு எம்.பி. மீது விசாரணை

இராணுவத்தில் தமிழ்ப் பெண்களை இணைப்பது குறித்து பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வி குறித்து தான் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் 4 ஆம் மாடி அலுவலகத்தில் அந்தத் திணைக்களத்தின் பொலிஸ் அதிகாரிகளால் தான் சுமார் இரு மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக சிறிதரன் எம்.பி. கூறியுள்ளார்.

இராணுவத்துக்கு தமிழ்ப் பெண்கள் சேர்க்கப்படுவது குறித்து நாடாளுமன்றத்தில் தான் பேசிய உரை தொடர்பாகவும், இது தொடர்பாக பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வி குறித்தும் தான் விசாரிக்கப்பட்டதாக சிறிதரன் கூறியுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மொழி அமுலாக்கலில் பிரச்சினையா? உடனடித் தீர்வுக்குப் புதிய கருமபீடம்

(கொழும்பு)

மொழி அமுலாக்கலில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு வழங்கும் வகையில் விசேட கருமபீடம் ஒன்று இன்று முதல் செயற்படவுள்ளது. தேசிய மொழி அழைப்பு மத்திய நிலையம் என்ற இக்கரும பீடம் இன்று தொடக்கம் செயற்படும் எனத் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒன்றிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். மொழி தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உடன்

19 ஆம் பக்கம் பார்க்க

## பொதுவான ஏ.ரி.எம். வலையமைப்பு

2013 முதல் அனைத்து வங்கிகளையும் சேர்ந்த ஏ.ரி.எம் (பண அட்டை) பாவனையாளர்களுக்கு இலகுவான பணம் மீளப்பெறல், கணக்கு மீதிகளைத் தெரிந்து கொள்ளல், பொருட்கள் கொள்வனவு மற்றும் பல சேவைகளை எந்தவொரு ஏ.ரி.எம். இயந்திரத்தின் மூலமாகவும் மேற்கொள்ளக் கூடிய புதிய இணைப்பு முறையொன்றை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை தேசிய கொடுப்பனவுகள் சம்மேளனம் மேற்கொண்டு வருவதாக மத்திய வங்கி அறிவித்துள்ளதுடன் CCAPS என பெயரிடப்

19 ஆம் பக்கம் பார்க்க

# பேருந்துகளின் பயண வருமானத்தை ஊழியர்களுக்கு பங்கிட்டு வழங்க ஏற்பாடு

(வடமராட்சி)

இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை ஊழியர்களுக்கான இம்மாத சம்பளம் வழங்கப்படாத நிலையில் அவர்களுக்கு பேருந்து பயணத்தின்மூலம் சபைக்குக் கிடைக்கும் நாளாந்த வருமானத்தை பங்கிட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் க.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

சாலை ஊழியர்கள் கடந்த மாதத்து சம்பளம் குறித்த காலப் பகுதிக்குள் வழங்கப்படாமையை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் அஸ்கர், சாலை ஊழியர்களுக்கு இம்மாத சம்பளம் 8 ஆம் திகதி வழங்கப்படும் எனவும் ஊழியர்கள் போராட்டத்தைக் கைவிடுமாறும் தெரிவித்த நிலையில் அவர்களுக்கான சம்பளம் வழங்கப்படவில்லை.

இதனையடுத்தே சபைக்கு பேருந்து பயணங்களில் நாளாந்தம் கிடைக்கும் வருமானத்தை பங்கிட்டு 15 இற்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ள நிலையில் ஏனையவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

இவர்களுக்கான சம்பளம் குறித்து இ.போ.ச அதிகாரிகளுக்கும் உயரதிகாரிகளுக்கும் தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

இதேவேளை பருத்தித்துறை சாலையை தனியாக சாலைக்கு கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஊழியர்களுக்கு சம்பளம், பஸ் வண்டிகளுக்கான செலவீனங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடிய நிலையில் அதற்கான செயற்பாடுகளை அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (116)

# வன்னிப்பகுதி பாடசாலைகளுக்கு 40 ஆசிரியர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து வெளியேறிய 40 ஆசிரியர்களுக்கு இன்று நியமனங்கள் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநரின் செயலகத்தில் வைத்து இன்று காலை 9.00 மணிக்கு இந்த நியமனக் கடிதங்கள் ஆளுநரால் வழங்கப்படவுள்ளது.

இந்த ஆசிரியர்கள் அனைவரும் வன்னி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

# ஊனமுற்றவரை வாழவைக்கும் பழைய 'பிளாஸ்ரிக் போத்தல்கள்'



(கைதடி)

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் மக்களால் கழித்துவிடப்படும் பழைய பிளாஸ்ரிக் வகையான போத்தல் பொருட்களுக்கு தற்போது பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இப்பொருட்களினால் சில ஊனமுற்றோரும், வேலைவாய்ப்பின்றி வறுமையில் தவிக்கும் மக்களுக்கும் வியாபாரம் செய்து உழைக்கும் வசதி வாய்ப்புக்கள் இப்போது அமைந்துள்ளன.

அண்மையில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஊனமுற்ற ஒருவர் 25 கிலோமீற்றர் நெடுந்தூரத்தைக் கடந்து சென்று நாவற்குழிப் பகுதியிலுள்ள தனது உறவினரின் வீட்டிற்கு அருகில் இதனை சேகரித்து விற்பனை செய்துள்ளார்.

இந்த வகையான பொருட்களைச் சேகரித்து 5 மூடைக்கு மேல் தனது முச்சக்கர வண்டியிலேயே தடிகளைக் கட்டி அதில் ஏற்றி கடும் காற்றுக்கு மத்தியில் தனது ஒரு கையினால் துவிச்சக்கர வண்டியை இயக்கி சம்பாதித்துள்ளார்.

செம்மணி வெளியூடாக பெரும் சிரமத்திலும் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதிப்பதனைக் காணமுடிகிறது. (80)

# கிராம அலுவலர்களுக்கான முகாமைத்துவப் போட்டியில் வெற்றி

(நயினாதீவு)

கிராம அலுவலர்களுக்கான முகாமைத்துவப் போட்டியில் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் முதல் 3 இடங்களைப் பெற்ற கிராம அலுவலர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதலாம் இடத்தை நயினாதீவு வடக்கு ஜே/34 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தியாகராஜா கோகுலரூபன், இரண்டாம் இடத்தை வேலணை மேற்கு ஜே/19 பிரிவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பிரமதீஸ்வரி, மூன்றாம் இடத்தை மண்கும்பான் மேற்கு ஜே/13 பிரிவைச் சேர்ந்த இராசையா யோகேஸ்வரன் ஆகியோர் வெற்றிபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (175)

# மாதாந்த உதவிப் பணம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான டிசம்பர் மாதத்திற்கான கொடுப்பனவு அவ்வவ் தபாலகங்களுக்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தமக்குரிய தபாலகங்களில் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறும், வருட முடிவாகையால் கணக்குகள் பூர்த்தியாக்கப்பட வேண்டியுள்ளதால் ஒத்துழைப்பு வழங்குமாறும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (104)

# புற்றுநோய் கிளினிக்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் நடமாடும் புற்றுநோய் கிளினிக் ஐப்பசி மாதத்திலிருந்து மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

இந்த நடமாடும் சேவை ஒவ்வொரு மாதமும் 2 ஆவது புதன் கிழமைகளில் சாவகச்சேரி பிரதேச வைத்தியசாலையிலும் நான்காவது புதன்கிழமைகளில் சங்கானை மற்றும் காரைநகர் பிரதேச வைத்தியசாலைகளிலும் இயங்குமென யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர் ந.ஜெயக்குமாரன் தெரிவித்துள்ளார். (10)

# முதியவர்கள் இணைந்துவாழ குடும்பசூழ்நிலை இடமளிக்கவில்லை

## - கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் -

(திருநெல்வேலி)

கைதடி முதியோர் இல்லத்தில் வாழும் முதியவர்கள் தமது பிள்ளைகளுடன் இணைந்து வாழ்வதற்கு விருப்பமுடையவர்களாக இருந்தாலும் அவர்களுடைய குடும்ப சூழ்நிலைகள் அதற்கு இடம்கொடுக்கவில்லை என கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

கணவன், மனைவி அல்லது குடும்ப அங்கத்தவர்களிடையே ஏற்பட்ட பிணக்குகள் காரணமாகவே அநேகமான முதியோர்கள் இவ்வில்லத்தை நாடி வந்துள்ளனர்.

வீட்டில் வைத்து முதியவர்களைப் பராமரிக்க முடியாத காரணத்தினால் அவர்களை இல்லங்களில் கொண்டுவந்து இணைத்துவிடுகின்றனர். இது முதியவர்களுக்கு பெரிதும் மன உளைச்சலை ஏற்படுத்தி வருகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

2020 ஆம் ஆண்டில் இலங்கையில் 30 வீதமான 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் இருப்பார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

முதியோர்கள் சமூகத்தில் வைத்து பிள்ளைகளினாலேயே பராமரிக்கப்படல் வேண்டும் என்னும் எண்ணக்கருவுடனேயே கைதடி முதியோர் இல்லம் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (137)

# முதியோர் சங்க கூட்டம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த முதியோர் சங்கங்களுக்கான கூட்டம் நாளை முற்பகல் 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல முதியோர் சங்க அங்கத்தவர்களையும் தவறாது பங்குபற்றுமாறு பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (104)

# தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



1 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர்: சு.சதுர்சன்

முகவரி: நவாலி



10 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர்: ம.மரியறெஜினா

முகவரி: கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

# ஆறுமுகநாவலர் வினாடிவினா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 132 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் ஆறுமுக நாவலர் சார்ந்த விடயப் பரப்பில் வினாடிவினாப் போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் 20 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குத் தனியாகவும் 20 வயதுக்கு மேற்பட்ட சைவப்புலவர்கள், இளம் சைவப்புலவர்கள் மற்றும் சைவ சித்தாந்த பண்டிதர்களுக்குத் தனியாகவும் நடத்தப்படும்.

இப்போட்டிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பங்குபற்ற விரும்புவோர் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், 153, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாமென சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார். (10)



நல்லூர் செட்டித்தெரு முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற வாணி விழாவில் சின்மயா மிஷன் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், மாணவிகளின் கலை நிகழ்ச்சியையும் காணலாம். (137)

# வடக்கில் மின்சார பிரச்சினை கவனம் செலுத்தப்பட வேண்டும்



போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதிக்கான அபிவிருத்தித் திட்டங்களில் முக்கியமானது வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார விநியோகத்தைப் பெறுவது என்பதாகும்.

எனினும் வ்டபகுதியில் மின்சார பிரச்சினை இன்றும் தீரவில்லை. மின்வெட்டு அதிகரித்த அளவில் உள்ளது.

வடபகுதிக்கு முழுமையாக மின்விநியோக்த்தை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தின் எரிபொருள் மற்றும் மின்வலு அமைச்சுத் தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தேசிய மின்னிணைப்புடன் இணைக்கப்பட்ட மின்சாரம் விரைவில் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதற்கும் கிடைப்பதற்கான ஏற்பாட்டை மின்வலு அமைச்சர் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதிக்கான அபிவிருத்தித்திட்டங்களில் முக்கியமானது வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ், மின்சார விநியோகத்தைப் பெறுவது என்பதாகும். இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கில் கணிசமான அளவு மக்கள் இலவசமான முறையில் முதற்கட்ட மின்சாரத்தைப் பெற்றுள்ளனர். இந்த மின்விநியோகம் மிக வேகமாக நடைபெற்று வந்தது.

ஆனால், தற்போதைய நிலையின்படி இந்த மின்விநியோக நடவடிக்கைகள் மந்த கதியை அடைந்துள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் மின்சார இணைப்பைப் பெறுவதற்காக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள். போரினால் நீண்டகாலமாகவே இருளில் வாழ்ந்த மக்களுக்கு நாம் மின்னிணைப்பைச் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். இந்த மாவட்டங்களுக்கு நேரிலே விஜயம் செய்திருந்த மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேரிலே பார்த்தறிந்தவர். அந்த மக்களின் வேண்டுகோளினையும் நன்றியினையும் கௌரவ மின்சக்தி அமைச்சர் நேரிலே பெற்றுக்கொண்டவர்.

எனவே இந்த மக்களின் மின் விநியோகத்தை விரைவாக செய்து முடிப்பதற்கான ஏற்பாடுகளை கௌரவ அமைச்சர் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். யாழ்ப்பாண மாவட்டத்திலே வலிகாமத்தில் புதிதாக மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு மின் விநியோகத்தை நாம் செய்ய வேண்டியுள்ளது. இந்தப் பிரதேசத்திற்கான மின்னிணைப்பையும் ஏற்படுத்த வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்திலே வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி கிழக்குப் பகுதிகளுக்கும், தீவகத்தில் சில பிரதேசங்களுக்கும் நாங்கள் மின்சார விநியோகத்தைச் செய்ய வேண்டியுள்ளது.

மின்சார விநியோகம் நடைபெறும்போது மீள் குடியேற்றம் என்பது முழுமைப்படுத்தப்பட்டதாக மாறுகிறது. இதை நாங்கள் செய்யாதிருக்கும்போது அது குறைநிலையில் இருக்கும் மீள்குடியேற்றத்தைப் போலவே அமைகிறது. ஆகவே மீள்குடியேற்றத்தை நாங்கள் வெற்றிகரமாக்குவதற்கு மின்சாரத்தை அந்தப் பகுதிகளுக்கு வழங்க வேண்டியது அவசியம்.

மின்சாரத்தைப்போலவே வடபகுதியில் எரிபொருள் தொடர்பாகவும் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் உள்ளன. எரிபொருள் விநியோகத்தைப் பொறுத்தவரையில் வடக்கிலே நிலைமை ஓரளவுக்கு மேம்பட்டுள்ளது. ஆனால், இது போதாது. இன்னும் அங்கே மண்ணெண்ணெய்க்கும் டீசல் எண்ணெய்க்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டைப்பொறுத்தவரை, அங்கே ஆறுகளோ குளங்களோ இல்லை. ஆகவே அங்கே உள்ள விவசாயிகள் நீர்ப்பாசனத்துக்கு மண்ணெண்ணெயைத்தான் நம்பியிருக்கிறார்கள். ஆகவே இந்த விவசாயிகளின் சிரமத்தைப் போக்குவதற்கு ஏற்றமாதிரி சீரான மண்ணெண்ணெய் விநியோகம் நடக்க வேண்டும். அதற்கான ஒழுங்குகளை எரிபொருள் அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## சாவகச்சேரி நகரசபையின் சிறுவர், முதியோர் தினவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்ற சிறுவர், முதியோர் தினவிழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மன்ற மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நகரசபைத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் யாழ்.வை.எம்.சீ.ஏ. நிறுவன அனுசரணையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் சாவகச்சேரி முகாமையாளர் க.சண்முகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக விலை மதிப்பீட்டுத் திணைக்கள யாழ்.பிராந்திய பிரதம விலை மதிப்பீட்டாளர் எஸ்.ஜெகநாதன், கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் பி.இரஜீவ், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் உதவிப்பணிப்பாளரும், யாழ்.வை.எம்.சி.ஏ. உபதலைவருமான பா.விமலராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சிறுவர்களின் கலைநிகழ்வும், முதியோர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது. (11)

## அபூர்வ தினம் 12.12.12 கைதடியில் கௌரவம்

(திருநெல்வேலி)

எதிர்வரும் 12.12.12 இல் வரும் அபூர்வநாளில் பிறந்த நாளைக் கொண்டாடவிருக்கும் 12 பேரைத் தெரிவுசெய்து அவர்களை கைதடி முதியோர் இல்லத்திலுள்ள முதியவர்களுடன் இணைத்து பிறந்த நாளை மகிழ்வுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை முதியோர் இல்லம் ஏற்பாடு செய்துள்ளது.

வரலாற்று சாதனையாகவும், முதியோர்கள் சமூகத்தில் வைத்து பிள்ளைகளினால் பராமரிக்கப்படல் வேண்டும் என்னும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் முதியோர் இல்லத்தினால் இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இதற்காக டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி அதாவது 12.12 இல் பிறந்த 12 பேரைத் தெரிவுசெய்வதற்கு கைதடி முதியோர் இல்லம் முன்வந்துள்ளது. இவர்கள் கைதடி முதியோர்களுடன் இணைந்து தமது பிறந்தநாளை இல்லத்தில் கொண்டாடவுள்ளனர்.

அன்று பி.ப. 3.30 மணியளவில் 12 பேர்களுக்கான புதிர்ப்போட்டி ஒன்றும் இடம் பெறவுள்ளது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. 12.12.12 இல் பிறந்தநாளைக் கொண்டாடவிருப்பவர்கள் கைதடி முதியோர் இல்ல 077 457 4565 என்னும் கைத்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (137)

## கார்த்திகைத் திங்கள் நிறைமதி கலைவிழா

(பருத்தித்துறை)

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி கல்வி அலுவலகம் நடத்தும் கார்த்திகைத் திங்கள் நிறைமதி கலைவிழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வ்டமாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளாக யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம், வட இந்து மகளிர் கல்லூரி மாணவரின் பேச்சு, ஹாட்லிக் கல்லூரி மாணவர்களின் குழு இசை, யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவர்களின் கிராமிய நடனக் கதம்பம், உடுத்துறை மகா வித்தியாலய மாணவர்களின் கவிதை, புற்றளை மகா வித்தியாலய மாணவர்களின் காவடி நடனம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் நடனம், வடமராட்சி வலய இசை ஆசிரியர்களின் இசைத்தென்றல், வடமாராட்சி மத்திய கல்லூரி மாணவர்களின் நாட்டுக்கூத்து (இராவணேசன்) போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறும். (109)

## வீதியைப் புனரமைக்க கோரிக்கை

வேலணையில்தாதா இருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் அம்பிகைநகர் பிரதேசம் வரையான வீதி மிக மோசமாக் சேதமடைந்துள்ளது.

இது தொடர்பாக கோரிக்கை முன்னர் விடுத்திருந்தும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அ்ண்மைக்காலமாக பெய்த மழையால் இவ்வீதியில் உள்ள கற்கள் அகன்று போக்குவரத்து செய்வதற்கு மிக கஷ்ட நிலையை பிரயாணிக்ள் எதிர்நோக்கி வருகின்றனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கையை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (138)







தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு "சமூக மட்ட நிறுவனங்களோடு இணைந்து நூலக அபிவிருத்தி" என்ற தொனிப்பொருளில் ஊர்காவற்றுறை பிரதேசசபையுடன் இணைந்து கனடாவிலுள்ள அனலைதீவு கலாசார ஒன்றியத்தால் மெருகூட்டப்பட்ட அனலைதீவு பொது நூலகக் கட்டடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் தலைவரும் பிரதேசசபையின் செயலாளருமாகிய சு.சுதர்ஜன் மங்கள விளக்கேற்றுவதையும், நிகழ்வின் சிறப்பு விருந்தினரும் பிரதேசசபையின் உப தவிசாளருமாகிய ம.பெ.பெ.அல்பேட் நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்வதையும், கனடா அனலைதீவு கலாசார ஒன்றியத்திற்கான நன்றி மற்றும் பாராட்டு தெரிவிக்கும் பத்திரத்தை அதன் பிரதிநிதி நா.பரஞ்சோதியிடம் அனலைதீவு பொது நூலகர் ச.தர்மிளா கையளிப்பதையும் காணலாம்.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net


## நம்புவோம்; குறுக்கு வழிகள் இல்லை!

யார் இவரென்றறியாத ஏழைக் குடும்பத்தில் பிறந்து, பிரெஞ்சு இராணுவத்தில் ஒரு சாதாரண சிப்பாயாகச் சேர்ந்து படிப்படியாக தளபதியாகி, நாளடைவில் நாட்டின் மன்னனாகி, முடிவில் ஐரோப்பாவின் பெரும்பகுதிக்குச் சக்கரவர்த்தியாகியவன் நெப்போலியன். "அசாத்தியம் என்ற சொல் என் அகராதியில் கிடையாது" என்பது அவனது பிரபலமான வசனம்.

எதுவும் சாத்தியமே என்று தமிழிலே பாடினவர் தாயுமானவர்: "கரடி வெம்புலி வாயையும் கட்டலாம், ஒரு சிங்க முதுகின் மேற் கொள்ளலாம், கட்செவி எடுத்தாட்டலாம், அனல்மேல் நடக்கலாம், ஜலமேல் இருக்கலாம், தன்னிகரில் சித்தி பெறலாம், சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது காண்" என்று பாடியவர்.

முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்பது உண்மைதான். இருக்கும் நிலையிலிருந்து முன்னேற வேண்டுமானால் நாம் முதலில் கற்றுக்கொள்ள வேண்டியது எப்படிச் சிந்திப்பது என்பதேயாகும். சிலர் முயற்சி என்றால், மாடுபோல் உழைத்தல் என்று கருதுகிறார்கள். சிந்தனையற்ற வெறும் உழைப்பினால் தேவைக்கதிக களைப்பு ஏற்படுமே தவிர பிரயோசனம் அதிகம் இருக்காது.

உதாரணமாக, ஒரு வாழைமரத்தை நாம் வெட்டி வீழ்த்த வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். அதற்கு கூர்மையுள்ள பெரிய கத்தி ஒன்றை எடுத்து, அதனால் வெட்டி வீழ்த்த வேண்டும். அப்படியில்லாமல், ஒரு பிளேடைக் கொண்டு அதைச் செய்ய முயன்றால் காலம் விரயமாகும்; கைகள் வலிக்கும்; சில சமயம் விரல்கள் வெட்டுக்காயத்திற்கும் ஆளாகும். பிளேட் முறிந்துவிடவும் கூடும். வாழைமரம் வெட்டப்படப் போவதில்லை.

ஆகவே முயற்சி என்பது கடின உழைப்பன்று. புத்திசாலித்தனமான, விவேகமான உழைப்பு. அறிவின் துணையோடு மேற்கொள்ளப்படும் முயற்சிதான் பலன் தரவல்லது. வெறுமனே உணர்ச்சியையும் ஆவேசத்தையும் மட்டுமே கொண்டு எதையேனும் முயன்று கொண்டிருப்பதாகப் பாசாங்கு செய்வது, ஒன்றும் நடைபெற்றுவிடாமல் குழப்புவதற்கானதாகவே இருக்கும்.

ஏதோ ஒரு மூலையில் அரசியல், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டாலும் அதன் வேதனையை உலகின் ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டிய கட்டாயம் கொண்ட காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் மட்டுமே தனியாக வருந்திச் சுமை சுமப்பவர்களல்ல. நெருக்கடிகளில் இருந்து தப்பிக்க சிறப்புக் கவசம் வெளியிலிருந்து பொருத்திக்கொள்ளவும் முடியாது. நமக்குள்ளேதான் நமது சமாதான வாழ்விற்கான விடைகளும் உள்ளன. வாழ்வை மாற்றுவதற்கு நாம் மாறியாக வேண்டும்.

உண்மையில் முப்பது வருடங்களாக கொடிய போர் நடைபெற்ற நாட்டில் அமைதிக்கும் சகஜ வாழ்விற்கும் மாறுவது என்பது ஒரே நாளில் நடந்துவிடக்கூடியதல்ல. ஒவ்வொரு கட்டமாக நகர வேண்டும். தற்காலிகமான பல மாற்றங்களைச் சகிக்க வேண்டும். அவசரப்பட்டு பழைய கோப வெறுப்புகளைப் புதுப்பித்துக் கொண்டிருக்கவோ சாதிக்கவோ முனைந்து பழைய குழிக்குள் விழுந்துவிடக் கூடாது.

சகலதரப்பு நம்பிக்கையுடனும் மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்று நம்பவேண்டும். உலகில் நாம் மட்டுமே நெருக்கடிகளைச் சந்தித்த மக்களல்ல. இனநெருக்கடிகளிலிருந்து மீண்ட பல உதாரண நாடுகள் நம் முன்னால் உள்ளன. இருதரப்பு மக்களினதும் மனோநிலையைப் புரிந்துகொண்ட நல்லிணக்கச் செயற்பாடுகளின் மூலம் இந்நாட்டில் உண்மையான அமைதியையும் செழிப்பையும் கொண்டுவர முடியும். - ஆசிரியர்

# 'திவிநெகும' சட்டமூலம் குறித்து மக்களுக்கு விளக்கமளிப்பு

(நல்லூர்)

'திவிநெகும' (வாழ்வெழுச்சி) சட்டமூலம் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டங்கள் தற்போது யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் உள்ள சமுர்த்தி மகாசங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஏழை மக்களின் வறுமைத் தணிப்புத் தொடர்பாக புதிய சட்டமூலமாக நாடாளுமன்றில் இச்சட்டமூலம் அரசால் நிறைவேற்ற முயற்சிக்கப்பட்டபோது எதிர்க்கட்சிகள் நீதிமன்றில் செய்த மனுத்தாக்கல் காரணமாக சட்டமூலம் நிறைவேறுவதில் தாமதம் ஏற்பட்டது.

இதேவேளை பொதுமக்களுக்கும் இச்சட்டமூலம் தொடர்பாக சந்தேகங்களும், குழப்பங்களும் ஏற்பட்டது.

இதனையடுத்து இலங்கை சமுர்த்தி அதிகாரசபை நாடளாவிய ரீதியாக சமுர்த்தி பயனாளிகள் மற்றும் சமுர்த்தி சங்கங்களின் தலைவர்களுக்கு சட்டமூலம் தொடர்பாக விளக்கமளிக்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதன் ஒருகட்டமாக தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள சமுர்த்திக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் பயனாளிகளுக்கு திவிநெகும சட்டமூலம் தொடர்பான நன்மையான அம்சங்கள் தொடர்பாகவும் அதனால் அத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது. (26)

## கைதடிச்சந்தியில் வீதிப்புனரமைப்பு

ஏ -9 வீதிப்புனரமைப்புப் பணி பூர்த்தியடையும் தறுவாயை எட்டியுள்ளது. ஏ -9 வீதியில் 80 வீதத்திற்கும் மேற்பட்ட தூரம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேலும் சில இடங்களில் மட்டும் தற்போது புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றது. கைதடிச்சந்திப்பகுதியில் புனரமைப்புப்பணி தற்போது இடம்பெற்றுவருகின்து.

# மிஹின் லங்கா நிறுவனத்திற்கு 8.5 பில்லியன் ரூபா நட்டம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமான மிஹின் லங்கா விமான சேவையால் 8.5 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

2007ஆம் ஆண்டு முதல் இந்த விமான சேவை நட்டங்களை எதிர்நோக்கி வருகிறது. நாடாளுமன்றத்தின் கணக்காய்வுக் குழுவான கோப், நேற்றுமுன்தினம் இது தொடர்பில் அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

குறித்த விமான சேவை தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கி வருகின்ற போதும், அதன் 6 பேரைக்கொண்ட பணிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டு வந்துள்ளன. தற்போது பணிப்பாளர்களுக்கு 11 மில்லியன் ரூபாய் வழங்கப்படுகின்றது.

இது கடந்த வருடத்தைக் காட்டிலும் 4 மில்லியன் ரூபா அதிகரித்த தொகையாகும். இதில் மிஹின் லங்கா பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு மாத்திரம் மாதாந்தம் 5 இலட்சம் ரூபா சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் மிஹின் லங்கா விமான சேவைக்கு இலங்கையின் திறைசேரியினால் இந்த வருடத்தில் 507 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டது. கடந்த வருடத்தில் 406 மில்லியன் ரூபா வழங்கப்பட்டன.

2010 ஆம் ஆண்டில் 1508 மில்லியன்களும், 2009 ஆண்டில் 2882 மில்லியன்களும், 2008ஆம் ஆண்டில் 500 மில்லியன் ரூபாவும், 2007 ஆம் ஆண்டில் 250 மில்லியன்களும் வழங்கப்பட்டன.

இந்தநிலையில் 2007, 2008 ஆண்டில் மிஹின் லங்கா நிறுவனம், 3.1 பில்லியன் ரூபா நட்டமடைந்தது. 2008, 2009 ஆம் ஆண்டு 1.3 பில்லியன் ரூபா நட்டமடைந்தது. 2009, 2010 ஆண்டில் 1.2 பில்லியன் ரூபாயினாலும் 2010, 2011 ஆண்டில் 940 மில்லியன் ரூபாயினாலும் நட்டமடைந்தது.

அத்துடன் 2011, 2012 ஆம் ஆண்டில் அந்த நிறுவனத்துக்கு 1.9 பில்லியன் ரூபா நட்ட மேற்பட்டது.

# ஒன்றிணைந்த நேர அட்டவணைக்கு பேருந்து சேவைகள் இணக்கம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல், தனியார் பேருந்துகள் மற்றும் மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து சேவைகள், ஒன்றிணைந்த நேர அட்டவணைக்கு அமைய, செயற்படும் என தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி. ரட்நாயக்க அறிவித்துள்ளார்.

இதற்கு தனியார் பேருந்து சங்கங்கள் தமது இணக்கபாட்டை வெளிப்படுத்தியிருந்தன.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது அமைச்சர் இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

இதன் போது கருத்து வெளியிட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ன, முன்னரும் அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்ட இந்த ஒன்றிணைந்த நேர அட்டவணையை துரிதகதியில் அமுல்படுத்துவார்களானால், அதற்கு தாம் ஆதரவினை வழங்கத் தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஒன்றிணைந்த நேர அட்டவணையினை நடைமுறைப்படுத்துவதற்கு தமது முழு ஆதரவினை வழங்க தயாராக இருப்பதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர, ஒன்றிணைந்த பேருந்து அட்டவணை ஒன்று நடைமுறைப்படுத்துவது தொடர்பாக போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார வெல்கம முன்னரும் தமது ஆதரவினை வழங்கியிருந்தார்.

தற்போதும், ஒன்றிணைந்த இந்தத் திட்டத்திற்கும் அவர் தமது பூரண ஆதரவினை வெளிப்படுத்தியுள்ளார்.

# வடமராட்சிப் பிரதேசத்தில் நல்லொழுக்க தின நிகழ்வு


(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், கரவெட்டி கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி.நற்குணலிங்கம். ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் நல்லொழுக்க நிறுவனத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் முதலாம் இடத்தை பெற்ற மாணவர்களின் நிகழ்வுகள், செயற்திறன் அரங்கத்தின் ஏற்பாட்டில் மதுபாவனைக்கு எதிரான கொடு வீச்சு, விழிப்புணர்வு நாடகம், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பட்டதாரி பயிலுநர்களின் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான புதிய வேலிகள் என்னும் விழிப்புணர்வு நாடகம் என்பன இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து போட்டியில் பங்குபற்றிய சகல மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.




"All tests point to the same conclusion: it is indeed a big banana."




"His brains were fried before he started to use a mobile phone!"

# அறிவியலும் சந்தை அறிவியலும்

■ அருண் நரசிம்மன்

**செல்போன் உபயோகம் நாளுக்கு நாள் அதிகரித்த படியே இருந்தாலும், சிட்டுக்குருவிகள் திரும்பிவந்துவிட்டதாய் ஓரிரண்டு மாதங்கள் முன் செய்தி வெளியானது உங்களில் அநேகருக்குத் தெரியுமோ? தெரியாதிருந் தால் வியப்பில்லை, 'பரபரப்பிற்கு' எதிராய் வரும் மறுப்புச் செய்திகளை, ஆதாரம் இருந்தாலும், அவ்வளவு விளம்பரப்படுத்த மாட்டார்கள். இதுவும் சந்தை அறிவியலின் அறிகுறி.**

சந்தை இலக்கியம் என்று சில பத்தாண்டுகளுக்கு முன் தமிழ் எழுத்துச் சூழலில் அறியப்பட்ட எழுத்து வகை இருந்தது நாமறிந்ததே. "சந்தை", சமீபகாலமாக "வணிக"அல்லது "கேளிக்கை" என்று மாறியுள்ளது. வாசிப் பனுபவத்தில் அதற்கான தேவையும் பங்களிப்பும் இருந்தாலும், சந்தை இலக்கி யத்தின் ரசனை என்பது வாசிக்கும் மக்கள் தொகை யின் பொதுவான சராசரியைக் கவ்வி நிற்பது. சந்தை இலக் கியத்திற்கு விற்பனையே குறி. இதைப்போலவே "சந்தை அறிவியல்" என்று ஒரு வகை உள்ளது. இன்று பரிமளிக்கிறது.

"சந்தை அறிவியல்" ஊடகச் செல்வாக்கினால் முக்கியமாக, ராட்சஸமாக வளர்ந்துவரும் இணையத்தினால், வளர்த் தெடுக்கப்பட்ட "பொப்புலர் சயன்ஸ்" வகையின் வீழ்ச்சி. பொப்புலர் சயன்ஸ் என் பதைப் பரப்பறிவியல் (பொதுமக்களிடம் பரப்பும் வகையில் பகிரப்படும் அறி வியல்) என்றால், சந்தை அறி வியலைப் பரபரப்பு அறி வியல் எனலாம். இவ்வளவு நாள் மனித அறிவுக்கலனில் தொகுத்துள்ள அறிவியல் புரி தல்களை எதிர்த்தோ, அல்லது மாற்றியமைக்கும் வகையிலோ புதிய ஆராய்ச்சி முடிவுகள் வந் துள்ளதாக அறிவித்து பரபரப்பு ஏற்படுத்துவது. பலசமயம் சம்பந் தப்பட்ட விஞ்ஞானிகள் அப்படித் தான் கூறுகிறர்களா என்பதை சரிபார்க்காமலேயே. சிலசமயங் களில் சம்பந்தப்பட்ட விஞ்ஞானி களும் பரபரப்பிற்கு பலியாவது துரதிர்ஷ்டம். விரைவான புகழுக் காகவோ, அல்லது தங்கள் ஆராய்ச்சி மான்யத்தை தக்க வைத்துக் கொள்ளும் நிர்ப்பந்தங்கள் போன்றவைகளில் சிக்கியோ ஊடகங்களைத் திரட்டி, மாநாடு நடத்தி விளம்பரம் தேட விழை கிறார்கள். கடந்த இரண்டு மூன்று வருடங்களில் இணையத்தில் பிரபல செய்திவெளியீட்டு நிறுவனங்களின் அறிவியல் செய்திகளைக் கவனித்துவந்தாலே இது தெரியும்.

செல்போனினால் சிட்டுக்குருவிகள் அழிவு, தேனீக்கள் அழிவு, மனித மூளையும் பாதிக்கப்படுகிறது. செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் மூளையின் சூட்டைத் தணிக்கிறது ஒளியை விஞ்சும் நியூட்ரினோக் கள்: கவிழ்ந்தார் ஐன்ஸ்டீன், கண்டுவிட்டோம் "கடவுள் துகள்" ஆர்செனிக்கை உண்ணும் பக்டீரியா: உ யிரியல் பாடப் புத் தகங்களை மாற்றியமைக்க வேண் டியதே.... இப்படியாகப்பட்ட "அறி வியல் செய்திகள்".

செல்போன் உபயோகம் நாளுக்கு நாள் அதிகரித்தபடியே இருந்தாலும், சிட்டுக்குருவிகள் திரும்பிவந்து விட்டதாய் ஓரிரண்டு மாதங்கள் முன் செய்தி வெளியானது (டைம்ஸ் ஓ.ஃப் இந்தியாவில்) உங்களில் அநேகருக்குத் தெரியுமோ? தெரியா திருந்தால் வியப்பில்லை, "பரபரப் பிற்கு" எதிராய் வரும் மறுப்புச் செய்திகளை, ஆதாரம் இருந்தாலும், அவ்வளவு விளம்பரப்படுத்த மாட் டார்கள். இதுவும் சந்தை அறிவியலின் அறிகுறி.

தேனீக்கள் அலைபேசியின் அலை களினால் பாதிக்கப்படுகின்றன என்று இரண்டு வருடம் முன் (இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆராய்ச்சி சஞ்சிகையில்) வெளியான ஒரு ஆராய்ச்சியை, ஊடகச் செய்தி யைக் கடந்து மூலத்தை - ஆராய்ச்சிக் கட்டுரையை - கவனித்து, வாசித்துப் பார்த்தேன். தேனீக்கள் வசிக்கும் கூட்டினுள் அலை பேசியைப் போட்டு விட்டு, அதனைத் தொடர்ந்து அதிர்வு நிலையில் (வைப்ரேட்-மோடில்), சுமார் ஒரு மணிநேரம் வைத்திருந்து, அதனால் தேனீக்கள் பரபரப்பாய் வெளியேறிவிடுகின்றன. அலை பேசியை அண்டவில்லை என்று "நிறுவியுள்ளார்கள்".

பெரிய படிப்பு இல்லாத எழுத்தறிவு மட்டுமுள்ள எளியோருக்கும் வாசித்தவுடன் அன்றாடத்துடன் விலகியுள்ள இந்த "ஆராய்ச்சி முடிவு-களின்" நிதர்சனம் புலப் பட்டுவிடும். ஆனால், சார்ந்த ஊடகச் செய்திகள் தலைப் பிலேயே "செல்போனினால் தேனீக்களுக்கு ஆபத்து, விஞ்ஞானிகள் அறிக்கை" என்று வருகிறது. யாரைக் குறை சொல்வது?

சென்ற வருடம் (2011) ஒரு வாராந்தரியில் "எச்சரிக்கை ரிப்போர்ட்" பகுதியில் செல் போனை காதில் வைத்துப் பேசுகையில் மூளை பாதிக் கப்படும் "அபாயத்தை"ப் பற்றி ஒருபக்கத்தில் சுருங் கச் சொல்லி விளக்கியிருந் தார்கள். தலையின் ஒரு பகுதியில் சிவப்பாய் வருமாறு கலரில் மனித முகமும் போட்டு, ஆராய்ச்சி முடிவுகள் இப் படித் தெரிவிப்பதாய் எழுதியிருந்தார் கள். கூடவே ஒரு மருத்துவரின் (அவர் படமும் உண்டு) பரிந்துரை. அலை பேசிகள் உபயோகத்தில் இருக்கையில் (பேசிக் கொண்டிருக்கையில்) மின் காந்தக் கதிரியக்க அலைகளை வெளிப்படுத்த வல்லன. அதனால் மூளைக்கு அருகில் காதில் வைத்துப் பேசினால், மூளை பாதிக்கப்படலாம். ட்யூமர் வருமா என்பதற்கு ஆதாரம் இல்லை. எதற்கும் எச்சரிக்கையாய் நாம்தான் குறைவாய் பேசவேண்டும், இப்படிப் பரிந்துரைத்திருந்தார்.

மேற்படி பத்தியை மீண்டும் வாசித்துவிட்டு யோசித்துப்பாருங்கள். எளியோரான நம் புத்திக்கு எட்டாத எந்த "புதிய ஆராய்ச்சி" விஷயத்தை இந்த "எச்சரிக்கை ரிப்போர்ட்" அளித்துள்ளது? இன்ப்ராரெட் தெர்மோகிராப் கொண்டு செல்போன் பேசுகையில் மண்டையில் வெப்பநிலையைக் குறிக்கும் வகை யில் எடுக்கப்பட்ட படத்தைக் கொண்டு மூளை "பாதிக்கப்படும்" என்று சொன்னால் சரியான வாத மில்லை. பாதிப்பு என்றால் என்ன? பாதகமாகவா, சாதகமாகவா? பாத கம் என்றால் மூளை அல்லது அதன் எப்பகுதி என்னவாகும்? மின்காந்த அலைகளினாலா? இயக்கம் மாறு படுமா? வெப்பநிலையால்தான் என்றால், வெந்நீரில் குளித்தா லும் மூளை பாதிக்குமா? இப்படி யெல்லாம் கேட்கப்போனால், கேள்விகளே அச்செய்தியின் அளவை விட நீண்டு விடுகின் றன. தொகுத்துக் கேட்டு பிரசுர மாக்குவதற்குள் அடுத்த வாரம், வேறு ஒரு "எச்சரிக்கை" வெளி வந்துவிடுகிறது.

சரி, நிசமாகவே செல்போனை மூளைக்கருகில் அதிக நேரம் வைத்திருந்தால் கேடா என்றால், அவ்வகை முடிவுகள் கொண்ட ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை சென்றவருடம் (2011) வாசித்தேன். கூடவே "செல்போன்கள் மூளை யின் இயக்கத்தைப் பாதிக்க வல் லவை" என்கிற வகைத் தலைப்பின் கீழ் "சந்தை அறிவியல்" செய்தியும் வெளியாகியிருந்தது. பார்த்தவுடன் எரிச்சலூட்டும் தலைப்பு (மூளையை பாதிக்காத மனிதச் செயல்பாடு எது? கையை ஆட்டினாலும், காலை ஆட்டினாலும்-தான் மூளை "பாதிக்கப்படும்"). ஆராய்ச்சிக் கட் டுரை மூலத்தை வாசித்துப் பார்த் தேன். காதின்மேல் இருத்திக் கொண்டு செல்போனில்பேசினால், காதுப் பகுதியின் அருகாமையில் மூளையினுள் வெப்பநிலை உயரு-வதாய் நிறுவியிருந்தார்கள்.

அடடா, சரியாக இருக்கிறதே என்று மேலும் துழாவினால், பரிசோதனை யில் செல்போனை காதிற்கருகில் தொடர்ந்து ஐம்பது நிமிடம் பிடித் துப் பேசிக்கொண்டிருந்தால் இவ்வாறு மூளை சூடாகிறதாம். "கைவலிக்காதோ?" என்று ஒரு கேள்வி தோன்றினாலும், நான் கேட்க நினைத்தது: "ஒருவன் ஐம்பது நிமிடம் தொடர்ந்து செல் போனில் பேசினால், அது மூளை இருப்பவன் செய்யும் செயல் என்று நிரூபிப்பதற்கே ஆதாரம் கேட்கவேண்டுமே. பின் அவனுக்கு இருப்பதாய் சந்தேகப்படும் அம்மூளை ஆராய்ச்சி நிருபணத்தில் சூடானால் என்ன, சுக்கலாயிரமாய்ச் சிதறினால்தான் என்ன?"

ஆனாலும் இவ்வகை "சந்தை அறி வியல்" செய்திகளைத் தொடர்ந்து உள்வாங்கும் நாம், செல்போன் பேசுவதினால் உண்மையில் நமக்கு எவ்வளவு, எப்படி ஆபத்து, எது பாதுகாப்பான செயல்பாடு என்றெல்லாம் அறிந்துகொள்ள மெனக்கெடுவதில்லை (நானும் இக்கட்டுரையில் எழுதப்போவ தில்லை). செல்போனினால் மூளைக்கு ஆபத்து என்கிற ஒற்றைவரி பயம் மட்டும் நமக்குள் தங்கிவிடுகிறது. நாலுபேரை அலை பேசியில் கூப்பிட்டு, அலறி அங்கலாய்த்துக்கொள்கிறோம்.

இது சந்தை அறிவியலையும் கடந்த மந்தை அறிவியல்.

அறிவியல் சிந்தையின்படி எந்தச் சித்தாந்தமும், கருதுகோளும், கட்டமைப்பும் எதிர் ஆதாரங்களுடன் மறுக்கப்படக் கூடியதே. ஐன்ஸ் டீனும் விலக்கல்ல. ஆனால் சித்தாந்தங்களின் திறனுக்கும் பொது அம்சத்திற்கும் ஏற்ப எதிர் ஆதாரங்களும் அவ்வளவு வலுவா-னதாக அமையவேண்டும்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# "13" ஐ இரத்துச் செய்ய முயன்றால் தீர்க்கமான முடிவு எடுப்போம்



(கொழும்பு)

அரசியலமைப்பிலிருந்து 13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யும் முயற்சியை அரசாங்கம் உடனடியாக கைவிட வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் தீர்க்கமான முடிவுகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கும் என்று தெரிவித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளோம் என்று அக்கட்சியின் செயலாளர் ஹசன் அலி (பா.உ.) தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த சனிக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் கூடி முக்கியமான மூன்று விடயங்கள் தொடர்பாக தீவிரமாக ஆராய்ந்தது.

இதன்போது 13 ஆவது திருத்தச்சட்டம், திவிநெகும சட்டமூலம் மற்றும் பிரதம நீதியரசர் விவகாரம் என்பவை குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

திவிநெகும சட்டமூலத்திற்கு எதிராக மாகாணசபைகளில் வாக்களித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மாகாணசபை உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேபோன்று 13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும். மாகாண சபை முறைமையை ஒழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் கருததுக்களை பரப்பி வருகின்றது.

இதனை வன்மையாக கண்டிப்பது மாத்திரமன்றி 13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசியலமைப்பிலிருந்து இரத்துச் செய்யும் யோசனையை அரசாங்கம் கைவிட வேண்டும்.

ஏனென்றால் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானதல்ல. இதனை மேலும அதிகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது.

இதனை இல்லாதொழிப்பது என்பது அனுமதிக்கக் கூடிய விடயமல்ல. முஸ்லிம் சமூகத்தின் வெறுப்புடனும், பல்வேறு தரப்புகளின் சந்தேகத்துடனும் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்துள்ளது.

இதனால் பல தரப்புகளின் ஆதரவுகளைக் கூட முஸ்லிம் காங்கிரஸ் இழந்துள்ளது என்றார்.

# நியூயோர்க்கில் மத்திய வங்கி கட்டடம் 50 இலட்சம் டொலருக்கு கொள்வனவு



(கொழும்பு)

நியூயோர்க் நகரில் 12,000 சதுர அடி தரையைக் கொண்ட கட்டடத்தை மத்திய வங்கி 50 இலட்சத்து 75,000 அமெரிக்க டொலர்களுக்கு கொள்வனவு செய்துள்ளது என்று பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியினால் நியூயோர்க் நகரில் கொள்வனவு செய்யப்பட்ட கட்டடம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கு வைக்கப்படவில்லை என நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்கிரமரட்ன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது இந்தக் கட்டடம் இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கு 68000 அமெரிக்க டொலர் வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நாணயச் சபையின் கணக்காய்வுக்குழு அறிக்கையில் இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் காட்டப்படவில்லை என விக்கிரமரட்ன எம்.பி சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த பிரதியமைச்சர் அமுனுகம மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது முதலீடு என்பதால் அது ஆண்டறிக்கையில் சேர்க்கப்படவில்லை. இனிவரும் மத்திய வங்கி அறிக்கையில் இதுபோன்ற கொள்வனவுகள் தவறாமல் பதியப்படும் எனவும் அமைச்சர் அமுனுகம உறுதியளித்தார்.

# பாதுகாப்பு பெட்டகத்தை கால்வாயில் வீசிய மாலி நாட்டவருக்கு விளக்கமறியல்



(கொழும்பு)

மாலி நாட்டவர் ஒருவரை நீர்கொழும்பு பிரதான நீதவான் ஏ.எம்.என்.பி.அமரசிங்க எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

வெளிநாட்டு பணம் அல்லது பெறுமதியான பொருள் இருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படும் பாதுகாப்பு பெட்டகம் ஒன்றை இரவு வேளையில் பலகத்துறை எமில்டன் கால்வாயில் வீசியமை தொடர்பான குற்றச்சாட்டிலேயே இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான வெளிநாட்டவர் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் முச்சக்கர வண்டி ஒன்றில் வந்து பலகத்துறை எமில்டன் கால்வாயில் பெட்டகத்தை வீசியுள்ளார்.

முச்சக்கர வண்டி சாரதி ஏத்துக்கால சுற்றுலாத்துறை பொலிஸ் நிலையத்தில் இச்சம்பவம் தொடர்பாக அறிவித்ததை அடுத்து பொலிஸார் துரிதமாக செயற்பட்டு குறித்த பெட்டகத்தை மீட்டுள்ளதோடு சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

14 அங்குலம் நீளமானதும் 8 அங்குலம் அகலமானதுமான குறித்த பெட்டகம் தண்ணீர் உட்புகாமல் இருக்க சுற்றி வர ரேப் இடப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் சந்தேக நபர் நீர்கொழும்பு பொலிஸாரினால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போதே டிசம்பர் 10 ஆம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர் விசா இன்றி நாட்டில் தங்கியுள்ளதாகவும் ஏத்துக்கால பிரதேசத்தில் வைத்து கைது செய்ப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# குற்றப் பிரேரணைக்கு எதிரான மகஜரை ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளிக்க முடிவு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக முனனெடுக்கப்படுகின்ற குற்றப் பிரேரணைக்கு எதிராக பெற்றுக் கொள்ளப்பட்ட கையொப்பம் அடங்கிய மகஜரை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையிடம் கையளிக்கவுள்ளதாக இளம் சட்டவுரைஞர்கள் சங்கம் அறித்துள்ளது.

இதேவேளை, பொதுநலவாய சட்டவுரைஞர்கள் சங்கம் மற்றும் அகில இலங்கை சட்டவுரைஞர்கள் சங்கம் ஆகியவற்றுககும் அந்த மகஜரை அனுப்பி வைக்கவுள்ளதாக மேற்படி சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன் சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து சட்ட நியாதியாக்கத்தை பாதுகாப்பது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அந்தச் சங்கம் மேலும் அறிவித்துள்ளது.

# பிரதம நீதியரசருக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் மீட்பு

(கொழும்பு)



பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவர் பிரதீப் காரியவசம் மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன ஆகியோரின் படங்களை கொண்டு அவதூறாக எழுத்தப்பட்ட ஒரு மூடை துண்டுப் பிரசுரங்கள் உயர் நீதிமன்ற நுழைவாயிலில் இருந்து நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டுள்ளன.

சிங்களத்தில் எழுத்தப்பட்ட இந்தத் துண்டுப் பிரசுரங்களில் இவர்களின் நடவடிக்கைகள், தனிப்பட்ட மற்றும் பொது வாழ்க்கை தொடர்பில் அவதூறாக எழுதப்பட்டிருந்தது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் வெளியீட்டாளரின் பெயர் இந்தத் துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விசாரணைக்கு வருமாறு திகாம்பரம் எம்.பி.க்கு அழைப்பு

(கொழும்பு)

தமது அரசியல் அதிகாரத்தின்ன பயன்படுத்தி பல மோசடி வேலைகளை செய்ததாகவும், அதற்கு ஜனாதிபதியின் பெயரினை பயன்படுத்தியதாகவும் இவர்மேல் எழுந்துள்ள குற்றச்சாட்டினை விசாரிக்க மேற்படி அழைப்பு குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவால் விடுக்கப்பட்டுள்ளது.

அதிகாரங்களை தமது சுய நலத்துக்காக பயன்படுத்தும் இவர்களை போன்ற அரசியல்வாதிகளின் விபரங்கள் அரசாங்கத்தாலும், பாதுகாப்பு அமைச்சினாலும் திரட்டப்பட்டு வருகிறது.

இதனை ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயஙகும் ஜனாதிபதி புலனாய்வுப் பிரிவு கண்காணித்து வருகிறது.

# கடிதங்கள் வீசப்பட்டமைக்கு எதிராக விசாரணை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் தபாலிட்ட ஆயிரக்கணக்கான கடிதங்கள் குருணாகல் மாவட்ட தபால் உத்தியோகத்தர்களால் வீசப்பட்டமை குறித்து விசாரணை நடத்தப்படும் என்று தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டி பகுதியில் உள்ள தனது ஆதரவாளர்களுக்கு தான் அனுப்பிய ஆயிரககணக்கான கடிதங்கள் உரியவர்களிடம் விநியோகிக்கப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினரான அகில விராஜ் காரியவசம் நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது எழுப்பிய கேள்விக்கு பதிலளிகும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குளியாப்பிட்டி பிரதான தபாலக அதிகாரிகளிடம் இதுபற்றி தான் முறைப்பாடு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

குளியாப்பிட்டிப் பகுதியில் உள்ள எனது ஆதரவாளர்களுக்கு தபாலிட்ட எனது கடிதஙகளை அவர்கள் எறிந்து விட்டனர். அதற்கு பின்னர் பிழை நடந்துவிட்டதாக அவர்களே ஏற்றுக்கொண்டனர். ஆயினும் இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது அமைச்சு மட்ட நடவடிக்கை இதுவரையிலும் எடுக்கப்படவில்லை எனச் சுட்டிக் காட்டினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஜீவன் குமாரதுங்க இதற்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக தான் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் இந்த விடயம் பற்றி தன்னிடமும் ஒரு முறைப்பாட்டை செய்யுமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

# 100 வருடம் பழமை வாய்ந்த கொழும்பு மாவட்ட செயலகத்தில் தீ

(கொழும்பு)



கொழும்பு புறக் கோட்டை டாம் வீதியில் உளள 100 வருடம் பழமை வாய்ந்த கொழும்பு மாவட்ட செயலக கட்டடத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

தீயைக் கட்டுபாட்டுக்குள் கொண்டுவருவதற்கு தீயணைப்புப் படையினர் நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் ஒரு மணிநேரத்திற்கு மேலாக கட்டடத்தில் தீ பற்றி எரிந்துள்ளதால் அங்கிருந்த ஆவணங்கள் அனைததும் முற்றாக எரிந்துள்ளது.

காணி மூல உறுதிகள், மற்றும் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் உட்பட முக்கிய ஆவணங்கள் பல எரிந்துள்ளது.

# சமய பாரம்பரிய விலகலே கலாசார சீரழிவுக்கு காரணம்

## - யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தலைவர் -

(வலிகாமம்)

இன்று யாழ்ப்பாணச் சமூகத்திலுள்ள இளைஞர், யுவதிகளிடையே காணப்படும் ஒழுக்கப் பிரச்சினைக்கும், கலாசார சீரழிவுகளுக்கும் பிரதான காரணம் கல்வி, சமயத்துடன் இணைந்து செல்லும். எமது பாரம்பரிய முறைமை கைநழுவிப் போய்க் கொண்டிருப்பதாலேயாகும் என யாழ்ப்பாண பல்கலைக் கழக முகாமைத்துவ பீடத்தலைவர் இ.ரட்ணம் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் சமுதாயத்துக்கு வேண்டிய கல்வியைப் போதிக்கும் நிலையங்களாகச் சமய நிறுவனங்களே இருந்து வந்துள்ளன. இந்த நிறுவனங்கள் கல்வியுடன் சமய விழுமியங்களிற்கும், பழக்க வழக்கங்களிற்கும் முக்கியம் கொடுத்து கல்வியைப் போதித்தும், சாதித்தும் வந்ததன் காரணமாக ஒழுக்கம் மிகுந்த சமுதாயம் உருவாக்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்று பாடசாலைகளில் சமயக்கல்வி வெறும் பாடமாக புள்ளி பெறும் நோக்கில் போதிப்பதனால் விழுமியப் பண்புகளின் பெறுமதிகளை மாணவர் சமூகம் உணரத்தவறிவிடுகின்றன. இதன் விளைவு இளைய தலைமுறையினர் ஒழுக்கப்பிறழ்வுகளில் ஈடுபட வழிசமைத்துள்ளது.

வலிகாமம் கல்வி வலயம் நடத்தியிருந்த ஆரம்ப கல்விப் பிரிவுப் பாடசாலை மாணவர்களிற்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வலயக்கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று வெளிநாடுகளில் படிக்காத மாணவர்கள் தங்களைச் சுய மதிப்பீடு செய்யும் நிலை உருவாகியுள்ளது. இதனால் பயிற்சியினாலும், அவர்கள் வாழும் சூழலினாலும் பெற்றுக் கொள்கின்றார்கள். இன் நிலை எமது கல்வி அமைப்பிலும் குறிப்பாக மாணவர்களிடத்தில் ஏற்பட வேண்டும் என்றார். (06)

# வீதிப் புனரமைப்பு துரித கதியில்



துண்டிச் சந்தியிலிருந்து கோலிக்குறொஸ் வரையான வீதியில் திருத்தப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

வடக்கின் வசந்தத்தின் கீழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரு முயற்சியால் இவ்வீதி பல ஆண்டுகளிற்குப் பின் காப்பெட் இடப்பட்டு செப்பனிடப்படுகின்றது.

துண்டி மக்களின் தேவைக்கென இவ்வீதி புனரமைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளிற்கு அமைய இவ்வீதி அபிவிருத்தி செய்யப்படுகின்றது. மழை காரணமாக சிறிது தாமதமகிய இவ் வேலைகள் தற்போது துரித கதியில் வீதி அடித்தள வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இதன் பணிகள் நிறைவு பெறவுள்ளன. தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள பல வீதிகளும் காப்பெட் இடப்பட்டு செப்பனிடப்படுகின்றன. (இ)

# விண்ணப்பம் கோரல்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழி, கணனிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கல்வித்திணைக்களத்தால் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்படவுள்ள இப்பயிற்சிகளைப் பெறவிரும்பும் அதிபர்கள், மற்றும் ஆசிரியர்களின் விபரங்கள் வல்யக்கல்வித் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாகவும், இப்பயிற்சிகளை இதுவரை பெறாதவர்கள் தமது பெயர் விபரங்களை அதிபரூடாக எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# உண்டியல் உடைத்து பணம் திருட்டு

(நயினாதீவு)

நயினாதீவு 4 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயத்தில் 3 உண்டியல்கள் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோயிலுக்குள் இருந்த 2 உண்டியல்களும் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணத்தை திருடர்கள் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மறுநாள் காலை கோயிலை சுத்தம் செய்பவர் ஆலயத்துக்கு வந்து பார்த்த போதே சில்லறை நாணயங்கள் சிதறிக்கிடப்பதைக்கண்ட அவர் பூசகருக்கு தெரியப்படுத்தினார். இத்தகவல் நயினாதீவுப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (175)



## அணியில் மாற்றமில்லை

(மும்பை)

இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கு அறிவிக்கப்பட்டுள்ள இந்திய அணியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

இந்தியா– இங்கிலாந்து மோதும் 3ஆவது டெஸ்ட் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான இந்திய அணி தேர்வு மும்பையில் நேற்று நடைபெற்றது. இந்திய அணி யில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

வேகப்பந்து வீரர் உமேஷ் யாதவ் காயம் காரணமாக மும்பை டெஸ்டில் ஆடவில்லை. அவருக்கு பதிலாக அசோக் திண்டா சேர்க்கப் பட்டிருந்தார். இந்த டெஸ்டிலும் உமேஷ் யாதவ் ஆடவில்லை.

மூன்றாவது டெஸ்டுக்காக அறிவிக்கப்பட்டுள்ள அணியில் டோனி (கேப்டன்), கம்பீர், சேவாக், புஜாரா, டெண்டுல்கர், ஹோலி, யுவராஜ்சிங், அஸ்வின், அசோக் திண்டா, ஒஜா, சகீர்கான், ஹர்பஜன் சிங், இஷாந்த் சர்மா, முரளி விஜய், ரகானே ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

## பலத்தை வெளிப்படுத்திய வெற்றி

(மும்பை)

அகமதாபாத் டெஸ்ட்டில் கற்றுக்கொண்ட பாடமே மும்பை டெஸ்டை வெல்ல முக்கிய காரணம். இந்திய மண்ணில் பெற்ற இந்த வெற்றி அணியின் பலத்தை வெளிப்படுத்தும் ஒன்றாக உள்ளது என இங்கிலாந்து அணி கப்டன் குக் தெரிவித்தார்.

இந்திய மண்ணில் பெறும் எந்தவொரு வெற்றியும், மிகப்பெரிய வெற்றியாகும். நான் இங்கு 18 ஒருநாள் போட்டியில் விளையாடி இருக்கிறேன். அதில் ஒன்றில் மட்டுமே வெற்றி கண்டோம். இந்தியாவில் ஒருநாள் போட்டியை விட அதிக டெஸ்ட் போட்டியில் நாங்கள் வென்று இருக்கிறோம். அடுத்த போட்டி குறித்து இப்போது அதிக ஆலோசனை செய்யமாட்டோம்.

கடந்த வாரத்தில் நடந்த முதல் டெஸ்டில் தோல்வி கண்டோம். இந்த டெஸ்டில் அதனை மாற்றிக் காட்டி இருக்கிறோம். இந்த வெற்றியை நன்கு அனுபவிப்போம். இன்னும் தொடர்ந்து ஆட்டங்கள் இருக்கிறது. ஓய்வு எடுத்து விட்டு அடுத்த போட்டியில் வெற்றிக்கு முழு ஆர்வத்துடன் தயார் ஆவோம். கெவின் பீற்றர்சன் வேகமாக ஓட்டங்கள் குவித்தது ஆட்டத்தை இந்தியாவிடம் இருந்து எங்கள் பக்கம் திருப்பியது. குறிப்பாக பனிசர், ஸ்வான் பந்து வீச்சு 2ஆவது இன்னிங்சில் சிறப்பாக இருந்தது. அவர்கள் இந்திய அணிக்கு நல்ல நெருக்கடி கொடுத்தனர்.

இந்திய மண்ணில் பெற்ற இந்த வெற்றி சிறபப்பானது. எமது அணியின் பலத்தை வெளிப்படுத்திய வெற்றி. இந்த வெற்றியின் மூலம் எமது வீரர்கள் மேலும் சாதிக்க முற்படுவார்கள். அடுத்து வரும் போட்டிகள் சவால் நிறைந்ததாக இருக்கும் என்றே கருதுகின்றோம். எமது வியூகம் போட்டிக் களத்தில் வெளிப்படும். தேவையற்று கதைப்பதைவிட போட்டிக்களத்தில் திறமையை வெளிப்படுத்துவதே சிறந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.






## சூழ்நிலையைப் புரியாத பந்துவீச்சு தோல்விக்கு வித்திட்டது

ஆடுகளத்தின் சூழ்நிலையைப் புரிந்து அதற்கு ஏற்றவாறு எமது பந்து வீச்சாளர்கள் பந்து வீசவில்லை. மும்பை டெஸ்ட்டில் நாம் தோல்வியடைய இதுவே முக்கிய காரணம் என இந்திய அணி கப்டன் டோனி தெரிவித்தார்.

மும்பை ஆடுகளத்தின் தன்மைக்கு தக்கப்படி இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசினார்கள். குறிப்பாக பனிசர் அபாரமாக பந்து வீசினார். அவர் எமது துடுப்பாட்ட வீரர்களை அதிகம் முன் காலைப் பயன்படுத்தி ஆடவேண்டிய நிலைக்கு தள்ளினார். அவரது பந்து வீச்சில் வேகமும், நல்ல சுழற்சியும் இருந்தது. எமது சுழற்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சு எனக்கு ஏமாற்றத்தை அளித்தது. ஆடுகளத்தின் சூழ்நிலை யைப் புரிந்து அதற்கு ஏற்றவாறு எமது பந்து வீச்சாளர்கள் பந்து வீசவில்லை. இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாட எமது பந்து வீச்சாளர்கள் வழிவகுத்து விட்டனர். தோல்விக்கு இதுவே காரணமாகும். முதல் நாளில் இருந்தே பந்து சுழலும் வகையில் ஆடுகளம் அமைக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தினேன். நாம் தோல்வி கண்டாலும் எஞ்சிய போட்டிகளிலும் இதேபோன்று ஆடுகளம் அமைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளம் தான் எமக்கு சிறப்புக்குரியதாகும்.டெஸ்ட் போட்டிகளில் சவால்களை சந்திக்க வேண்டியது அவசியமானதாகும். இதுபோன்ற விக்கெட்டுகள் சவால் அளிக்க கூடியதாகும். எனவே நாங்கள் நிச்சயமாக இதுபோன்ற ஆடுகளத்தைத் தான் விரும்புகிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## மாற்றம் தேவை

(கொல்கத்தா)

கொல்கத்தாவில் நடைபெறும் 3ஆவது டெஸ்டிலும் தோல்வியைச் சந்திக்காமல் இருக்க இந்திய அணியில் ஏராளமான மாற்றம் செ[illegible] வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி தெரிவித்தார்.

டோனி, ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் நன்றாக பந்து திரும்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பந்து நன்றாக திரும்பியது. ஆனால் இங்கிலாந்து சுழற்பந்து வீரர்கள்தான் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு சிக்கலை ஏற்படுத்திவிட்டனர்.

கொல்கத்தா ஈடன்கார்டன் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும் என்று டோனி கேட்கமாட்டார்.

கொல்கத்தா டெஸ்டில் ஹர்பஜன்சிங்குக்கு பதிலாக அசோக் திண்டாவுக்கு வாய்ப்பு கொடுக்கலாம். ஏனென்றால் 3 சுழற்பந்து வீரர்களுடன் ஆடியதால் எந்த பலனையும் அளிக்கவில்லை.

இந்த டெஸ்ட் தொடரில் டெண்டுல்கர் ஓட்டங்கள் எடுக்க முடியாமல் திணறுவது உண்மைதான். அவரது ஆட்டத்தில் சற்று தொய்வு ஏற்பட்டுள்ளது. ஆனால் இதற்கு அவர[illegible] வயது காரணமாக இருக்கலாம். மோசமான நி[illegible]யில் இருக்கும் அவர் ஓட்டங்கள் எடுப்பது அவசியமாகிறது. எஞ்சிய 2 டெஸ்டிலும் அவர் ஓட்டங்களைக் குவிப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## பார்சிலோனா வெற்றி



(மார்ட்ரிட்)

லெவாண்டே அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் உள்ள மாட்ரிட் நகரில் நடந்த லா லிகா கால்பந்து போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று போட்டியில் பார்சிலோனா, லெவாண்டே அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் ஏதும் அடிக்கவில்லை.

பின் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பார்சிலோனா அணிக்கு நட்சத்திர வீரர்கள் அசத்தினர். முதலில், மெஸ்ஸி (47, 52ஆவது நிமிடம்) இரண்டு கோல் அடித்தார்.

பின் இனியஸ்தா(57), பேப்ரிகாஸ் (63) ஆகியோர் கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

முடிவில், பார்சிலோனா அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டு கோல் அடித்து அசத்திய ஆர்ஜென்ரீனா வீரர் மெஸ்ஸி, இந்த ஆண்டில் தனது 82ஆவது கோலை பதிவு செய்தார். எஞ்சியுள்ள போட்டிகளில் மெஸ்ஸி இன்னும் 6 கோல் அடிக்கும் பட்சத்தில் ஜேர்மனி வீரர் முல்லரின் சாதனையை முறியடிக்கலாம்.

தவிர, இந்த ஆண்டு நடக்கும் லா லிகா தொடரில் அதிக பட்சமாக மெஸ்ஸி 19 கோல் அடித்துள்ளார்.

## ஒரு நாள் தொடரையும் வெல்வோம்

(டாக்கா)

டெஸ்ட் தொடரை வென்றது போன்று பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடரையும் கைப்பற்றுவோம் என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கப்டன் டரன் சமி தெரிவித்தார்.எமது அணியில் தற்போது சிறந்த வீரர்கள் இருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. டெஸ்ட் தொடரில் பந்துவீச்சாளர்கள், துடுப்பாட்ட வீரர்கள் என அனைவரும் சிறப்பான முறையில் செயற்பட்டமையே தொடரை வெல்ல முக்கிய காரணம். அதே போன்ற செயற்பாடுகள் ஒரு நாள் போட்டித் தொடரிலும் தொடரும். அதன் மூலம் ஒரு நாள் தொடரையும் கைப்பற்றுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.


## போராடுகிறது இலங்கை அணி




(கொழும்பு)

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி போராடி வருகின்றது. நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி கொழும்பில் நடைபெற்று வருகின்றது. இதில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி தொடர்ந்தது. மிகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி மத்தியூஸ், பரணவிதான இணை 90 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த சமரவீர அணியின் நிலையை உணர்ந்து ஆடி-வரும் அதேவேளை, மறுபுறத்தில் விக்கெட்டுக்கள் வீழ்ந்தது. எனினும் ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த ரண்டீவ் சமரவீரவிற்கு ஒத்துழைப்புக் கொடுக்கும் வகையில் ஆடி வருகின்றார். இந்நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக நிறுத்தப்பட்டவேளை, இலங்கை அணி முதல் இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சமரவீர 156 பந்துகளை எதிர்கொண்டு 76 ஓட்டங்களையும், ரண்டீவ் 102 பந்துகளை எதிர்கொண்டு 34 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். ஏழாவது விக்கெட்டுக்காக ரண்டீவ், சமரவீர இணை இதுவரை 97 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மத்தியூஸ் 117 பந்துகளை எதிர்கொண்டு 47 ஓட்டங்களையும், பரணவிதான 112பந்துகளை எதிர்கொண்டு 40 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ரிம் சௌத்தி நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று போட்டியின் நான்காம் நாளாகும். நேற்றைய மூன்றாம் நாள் 25 ஓவர்கள் மீதமுள்ள நிலையில் நிறுத்தப்பட்டது.





வடமாகாண மட்ட கராத்தே போட்டியில் 200இற்கும் மேற்பட்ட பதக்கங்களை சென்சே விஜயராஜிடம் கராத்தே கலையைப் பயிலும் வீர,வீராங்கனைகள் கைப்பற்றிக் கொண்டனர். இதனைப் பாராட்டி வடமாகாண கராத்தே சம்மேளனத்தினரால் விஜயராஜ் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். வடமாகாண கராத்தே சம்மேளனத்தின் செயலாளர் பிரபாகரன், விஜயராஜிற்கு பாராட்டி பரிசுப் பொருள் வழங்குவதைக் காணலாம். (எஸ்.பி.)

# கல்வி அமைச்சு அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

ஆளுநர் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் செயலக கொத்தணி அணியை கல்வி அமைச்சு அணி வெற்றிபெற்றது.

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்திற்கான வடமாகாண அமைச்சுக்களிற்கிடையிலான 10 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்தாட்டக் கிரிக்கெட் போட்டிகள் தற்போது கல்வியங்காடு ஜி.ரி.எஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் கல்வி அமைச்சு அணியினை எதிர்த்து பிரதமர் செயலக கொத்தணி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற பிரதம செயலக கொத்தணி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

10 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் சுபாஸ்கர், கௌரிராம் முறையே 16, 14 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் கல்வி அமைச்சு அணி சார்பாக செந்தூரன் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

68 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கல்வி அமைச்சு அணி 8.4 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத் திரம் இழந்து வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் சயந்தன், நிறஞ்சன் முறையே 33, 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

# பாடசாலை மட்ட கால்பந்து விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 6,7ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும், மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 16 பாடசாலை அணிகள் மோதவுள்ளதாகவும், போட்டிகள் சிறப்புற நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட பாடசாலைகள் கால் பந்தாட்டச் சம்மேளனத்தினால் இப்போட்டிகள் ஒவ்வொரு வருடமும் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி)

# ரதீசன், அனோஜன் சிறப்பான செயற்பாடு சென். பற்றிக்ஸ் இனிங்ஸ் வெற்றி



ரதீசன்

(யாழ்ப்பாணம்)

ரதீசன், அனோஜன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டி கடந்த 19ஆம் திகதி சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.இதில் சென். ஜோன்ஸ் கல்லூரி யின் 'பி' அணியும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அனோஜனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் அனோஜன் 78, டில்சான் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜருசன் 34 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி, ரதீசனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் விரைவாக விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. இறுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுசன் அதிகபட்சமாக 43 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைவரும் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ரதீசன் 28 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

91 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, ரதீசன், அனோஜன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மீண்டும் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தது. இறுதியில் இரண்டாவது இனிங்ஸிற்காக சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செந்தூரன் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ரதீசன் 13 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, விக்கெட்டுக்களையும், அனோஜன் மூன்று ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இதன் மூலம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இனிங்ஸாலும், 60 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது. (எஸ்.பி.)

# நாளைய ஆட்டம்

(மல்லாகம்)

மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் முத்துலிங்கம் நினைவுகரப்பந்தாட்டத் தொடரின் 'பி' பிரிவுக்கான ஆட்டம் நாளைய தினம் காலை 8.30 மணிக்கு ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே, நடைபெற்ற 'ஏ' பிரிவுக்கான போட்டியில் ஆவரங்கால் மத்தி அணி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள அணிகள்குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (93)

# யாழ். பல்கலையில்

## மாகோஸ் நிகழ்வு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் 'மாகோஸ்' என்று அழைக்கப்படும் விளையாட்டு, கலாச்சார நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகியது.

எஸ்.அமீர்ராஜ் தலைமையில் நடைபெற்ற மேற்படி ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரத்தினமும், சிறப்பு விருந்தினராக முகாமைத்துவ பீட பீடாதிபதி ரி.வேல் நம்பியும் கலந்து கொண்டனர்.

முதல் நாள் நிகழ்வாக மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்குமான கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெற்றது. தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்வுகள் தொடர்ந்து வரும் வாரங்களில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாரங்கள் ஏனைய விளையாட்டுகள் குறித்து விரிவுரைகளும், விளக்கங்களும் அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



சண்டிலிப்பாய் கோட்டக் கால்பந்தாட்டத் தொடரின் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட மாதகல் சென். ஜோசப் வித்தியாலய அணியைக் காணலாம். இப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி முதலிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)

# நோர்வேயின் இறுதிக்கட்ட முயற்சியை புலிகளின் தலைமை நிராகரித்தது உண்மை

**முன்னாள் புலிகளின் தலைவர் கே.பி. டி.பி.எஸ்.ஜெயராஜிற்கு வழங்கிய பேட்டியில்...**



சொல்ஹைம் என்னுடன் தொடர்பினை ஏற்படுத்தியிருந்தார். ஒரு யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்குரிய வழிவகைகளைப்பற்றி கலந்தாலோசிப்பதற்காக அமைதியாக ஒரு சந்திப்பை மேற்கொள்ள நாம் முடிவு செய்தோம். 2008 பெப்ரவரி கடைசியில் ஒரு இரகசிய கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூரில் உள்ள ஹில்ரன் ஹோட்டலில். அது இரண்டு நாட்கள் நடைபெற்றது.

எரிக் சொல்ஹைம் அதில் பங்குபற்றவில்லை. ஏனெனில் நோர்வேயின் அமைச்சர் என்றவகையில் அதில் பங்கு கொள்ள முடியாதளவுக்கு அவர் மிகவும் உயர்வான சுய தகுதியை கொண்டிருந்தார், ஆனால் அவர் தனது பிரதிநிதியாக முக்கிய நோர்வீஜிய அதிகாரி ஒருவரை அனுப்பியிருந்தார். ஒஸ்லோவில் இருந்து வேறு இரண்டு அதிகாரிகளும் மற்றும் கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ரோரே ஹட்றெமும் அதில் கலந்து கொண்டனர். ரோரே ஹட்றெம் இப்போது ஆப்கானிஸ்தானில் உள்ளார் என நினைக்கிறேன்.

எல்.ரீ.ரீ.ஈயை பிரதிநிதித்துவப்படுத்தி நான், எனது உதவியாளரும் மற்றும் செயலாளருமாக கடமையாற்றிய அப்பு என்கிற ஜோய் மகேஸ்வரன், உருத்திரகுமாரன் மற்றும் புலம்பெயர் சமூகத்தை சேர்ந்த சில முக்கிய எல்.ரீ.ரீ.ஈ ஆதரவாளர்களும் கூட அதில் கலந்து கொண்டிருந்தார்கள், அவர்களின் பெயர்களை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. உருத்திராவும் மற்றும் மகேஸ்வரனும் ஒஸ்லோவின் அனுசரணையுடன் முன்னர் நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுக்களில் எல்.ரீ.ரீ.ஈ யினை அதிகாரபூர்வமாக பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய நபர்களாக பங்களித்திருந்தனர்.

எல்.ரீ.ரீ.ஈ யின் தலைமையிடமிருந்து ஒரு யுத்த நிறுத்தத்தை கொண்டுவரும் ஆணை எனக்கு வழங்கப்பட்டிருந்ததினால், இந்த பேச்சுக்களில் அந்த விடயத்தை நான் எடுத்துரைத்தேன். பொதுமக்களின் துயரமான நிலையை கண்ணீர் பெருகும் நிலையில் நான் அங்கு எடுத்துச் சொல்லி, இந்த உயிர்களைக் காப்பாற்ற ஒரு யுத்த நிறுத்தத்தை கொண்டுவரும்படி நோர்வேயிடம் இறைஞ்சினேன்.

தூதுவர் ரோறே ஹட்றெம் மிகவும் ஒளிவு மறைவற்று நேரடியாக பேசுபவர். அவர் அதற்கு பின்வருமாறு பதிலளித்தார், நாங்கள் வெளிப்படையாக பேசி மற்றும் சில கடுமையான ஆனால் தெளிவான உண்மைகளையும் பேசுவோம் என்று.

முதலாவதாக நோர்வே தூதர் அப்போதுள்ள யுத்த களநிலமைகளை பற்றிய உண்மையான மதிப்பீட்டை எங்களுக்கு தெரிவித்தார். இராணுவ நிலையைப் பொறுத்தவரை இலங்கை இராணுவம் மேல் நிலையில் இருப்பதாக அவர் எங்களிடம் வெகு தெளிவாக தெரிவித்தார். 55 ஆவது படைப்பிரிவு சாளையில், 57 ஆவது படைப்பிரிவு விஸ்வமடுவில், 58 ஆவது படைப்பிரிவு தேவிபுரத்தில், 59 ஆவது படைப்பிரிவு முல்லைத்தீவு நகரத்தில் உள்ளது. பணிப்படை பிரிவு - 2 உடையார்கட்டிலும், பணிப்படை பிரிவு - 3 அம்பகாமத்திலும், பணிப்படை பிரிவு - 4 ஒட்டுசுட்டானிலும் உள்ளன.

எல்.ரீ.ரீ.ஈ ஒரு சிறிய துண்டுப் பகுதிக்குள் அடைபட்டுக் கிடக்கிறது, மற்றும் இராணுவம் மேலும் முன்னேறிச்சென்று புலிகளை நிர்மூலமாக்குவதற்கு ஒரு சிறிதளவு நேரமே தேவை என்று நோர்வே தூதர் சொன்னார். எல்.ரீ.ரீ.ஈ யினை தோற்கடிப்பதில் மிகவும் உறுதியாக உள்ள கொழும்புக்கு, ஒரு யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்வதற்கு நிச்சயமாக எந்த ஒரு அவசியமும் கிடையாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் எங்களிடம் நேரடியாக தெரிவித்தது, பொதுமக்களின் இந்த நிலைக்கு எல்.ரீ.ரீ.ஈயும் கூட பொறுப்பு ஏற்கவேண்டும் என்று. பொதுமக்களை மனிதக் கேடயங்களாகவும் பணயக் கைதிகளாகவும் பலவந்தப்படுத்தி வைத்திருப்பதற்காக எல்.ரீ.ரீ.ஈயை அவர் குற்றம் சாட்டினார். ஹட்றெம் அப்போது சொன்னது, ஒரு விட்டுக்கொடுப்புக்கு இணங்கிப்போகாமல் எல்.ரீ.ரீ.ஈயினால் ஒரு யுத்த நிறுத்தத்தை எதிர்பார்க்க முடியாது, என்று. "நீங்கள் சிலவற்றை பெறவேண்டுமானால் சிலவற்றை விட்டுக் கொடுக்கவேண்டும்" என்றார் அவர்.

எல்.ரீ.ரீ.ஈ முதலில் ஆயுதங்களை கீழே போட சம்மதித்தால் மட்டுமே நோர்வே அல்லது வேறு நாடுகள் கொழும்பிடம் ஒரு யுத்த நிறுத்தத்தை கேட்கமுடியும். இராணுவம் நிச்சயம் வெல்லப் போகிறது, அதனால் புலிகளுக்கு வேறு தெரிவு கிடையாது. எனவே உயிர்களின் இழப்பை நாங்கள் குறைக்க வேண்டுமென்றால் ஆயுதங்களை களைய நாம் சம்மதிக்க வேண்டும், என்று அவர் சொன்னார். உண்மையில் எல்.ரீ.ரீ.ஈ அப்படிச் செய்வதற்கு சம்மதித்திருந்தால், அப்போது நோர்வே அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற முக்கிய நாடுகளின் துணையுடன் இலங்கையிடம் ஒரு யுத்த நிறுத்தத்தை கோர முடியும். "எல்.ரீ.ரீ.ஈ ஆயுதங்களை கீழே போட சம்மதிக்காவிட்டால், போர் தொடர்ந்து நடைபெற்று ஒரு குறுகிய நேரத்துக்குள் முடிவடைந்துவிடும். அதுதான் எல்.ரீ.ரீ.ஈயின் முடிவாக இருக்கும்" என மிகச் சுருக்கமாக எங்களிடம் தெரிவித்தார்.

நாங்கள் எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரனுடன் தொடர்பினை ஏற்படுத்தி அவரது பதிலை பெறுகிறோம் என்று அவருக்குச் சொன்னோம். ஹட்றெம் உடனான அந்தக் கூட்டம் அந்தக் குறிப்புடன் நிறைவு பெற்றது.

நாங்கள் அனைவரும் வருத்தமடைந்தோம், ஆனால் ஹட்றெம் மிகவும் யதார்த்தமாக பேசுகிறார் என்பதை நான் உணர்ந்தேன். பின்னர் நாங்கள் அந்தக் கூட்ட விபரங்களை வன்னிக்கு தெரியப்படுத்தினோம். ஆனால் அங்கிருந்து கிடைத்த பதில் ஏமாற்றமளிப்பதாக இருந்தது. ஆயுதங்களை கீழே வைப்பதை அவர்கள் நிராகரித்ததுடன் எல்.ரீ.ரீ.ஈயின் பக்கமிருந்து எந்த சலுகைகளுக்கும் இடமளிக்காதபடி ஒரு யுத்தநிறுத்தத்துக்கு நாங்கள் முயற்சிக்க வேண்டும் என்றுமட்டும் வலியுறுத்தப்பட்டது.

## ஆறரை கோடி பேர்!




ஃபேஸ்புக்கில் இருக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை மட்டுமே 6.5 கோடி என்று கணக்கிட்டிருக்கிறார்கள். "இந்தியாவில் 2010ஆம் ஆண்டு வெறும் 80 இலட்சம் பேர் மட்டுமே ஃபேஸ்புக்கில் இணைந்திருந்தார்கள். ஒன்றரை வருடத்தில் 8 மடங்கு வளர்ச்சி அடைந்திருக்கிறோம். விரைவில் 10 கோடி பேர் என்கிற மைல்கல்லை எட்டுவோம்" என்கிறார் ஃபேஸ்புக் இந்தியாவின் தலைவர் கிருத்திகா ரெட்டி!

## கணிதமேதை சகுந்தலா!




ஒரு சேர்க்கஸ் வித்தைக்காரப் பெண்மணியின் எட்டுக் குழந்தைகளின் மூத்த மகளாகப் பிறந்தவர்தான் சகுந்தலா தேவி! வறுமையின் காரணமாக அவர் பள்ளிக்கூடம் போனதில்லை. தனது மூன்றாவது வயதில் சேர்க்கஸில் வரவு செலவில் ஏற்பட்ட குழப்பத்தை அங்கு தற்செயலாக வந்த குழந்தை கேட்டுவிட்டு பட்டென்று கணக்கின் தீர்வைச் சொன்னது. அதுதான் அவளின் கணிதத் திறமையை வெளிக்கொணர வைத்தது!

தனது ஆறாவது வயதில் மைசூர் பல்கலைக்கழக பேராசிரியர்களுடன் கணிதத்தில் வாதிட்டு வென்றார். பின்பு இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளின் கணிதப் பேராசிரியர்களிடமும் தனது கணித ஆற்றலை வெளிப்படுத்தி உலகை திரும்பிப் பார்க்க வைத்தார்!

ஜெர்மனியில் ஒரு கம்ப்யூட்டருடன் போட்டியிட்டு வென்றார். அதற்கு பரிசாக புகழ்பெற்ற பென்ஸ் காரைப் பெற்றார். கணிதம் மட்டுமல்ல, சமையல் கலை, கதைகள், நாடகங்கள் என்று பலதுறைகளிலும் புத்தகங்கள் எழுதி உலகப் புகழ் பெற்றவர் "சகுந்தலா தேவி".

கணிதத்தில் உலகை வியக்க வைத்தவர்கள் இந்தியாவில் இருவர். ஒருவர் சகுந்தலா தேவி. மற்றொருவர் கணித மேதை ராமானுஜம்!

## பச்சை குத்திக்கொள்வதில் மன்னர்!



பிரபல இங்கிலாந்து கால்பந்து வீரர் டேவிட் ஜோசப் பெக்கம், தன் உடலில் மொத்தம், 17 விதமான பச்சை குத்திக் கொண்டுள்ளார். லேட்டஸ்ட்டாக கறுப்பு வெள்ளையில் இயேசுவை, மூன்று குழந்தைகள் தூக்கியுள்ளது போல் பச்சை குத்திக் கொண்டுள்ளார். வயதானால், தன்னை தன் குழந்தைகள் தான் பாதுகாக்க வேண்டும் என்பதை சிம்போலிக்காக காட்டத்தான் இப்படி பச்சை குத்திக் கொண்டுள்ளதாக கூறுகிறார். மிகுந்த தெய்வ நம்பிக்கை உள்ளவர்.

தன் மனைவி விக்டோரியாவின் பெயரை ஆங்கிலத்தில் குத்தாமல், ஹிந்தியில் பச்சை குத்தியுள்ளார். ஆங்கிலத்தில், விக்டோரியா என்றால், அது இங்கிலாந்தின் முன்னாள் 'ராணியைத்தான் குறிக்கும். அதை தவிர்க்கத்தான், இப்படி குத்தியுள்ளதாக கூறுகிறார்.

விக்டோரியாவை மணந்து கொண்ட திகதியையும், தன் கையில் பச்சை குத்தியுள்ளார்.

வலது மற்றும் இடது தோள்களில் தேவதையும், மற்றொரு இடத்தில், "நான் அன்பிற்குரியவன் என்னைச் சார்ந்தவர்கள் என் அன்பிற்குரியவர்கள்" என்ற பைபிள் வார்த்தைகளை, ஹீப்ரு மொழியில் பச்சை குத்தியுள்ளார்.

சரி... இந்த பச்சை குத்தல்கள் எதற்கு எனக் கேட்டால், "என்னைச் சார்ந்தவர்கள், என்னை வளமூட்டியவர்களை பச்சை குத்தியுள்ளேன். என் மனைவியும், குழந்தைகளும் எப்போதும் என்னுடன் இருப்பதையே விரும்புகிறேன். அவர்கள் என்னுள் இருக்கின்றனர் என்பதை காட்டத்தான் பச்சை குத்தியுள்ளேன்..." என்கிறார்.

# புகழுக்குத் தகுதி!

தன்னை இதுவரை ஒருவருமே புகழ்ந்து பாடவில்லையே என்ற கவலை அந்தச் செல்வந்தருக்கு.

ஆயிரம் பொற்காசுகளைக் கையில் வைத்துக் கொண்டு புலவர் ஒருவரைத் தேடிச் சென்றார் அவர்.

"என்னிடம் ஆயிரம் பொற்காசுகள் உள்ளன. உங்களுக்கு 50 பொற்காசுகள் தருகிறேன். என்னைப் புகழ்ந்து பாடுங்கள்"

புலவர் சொன்னார்: "ஆயிரம் பொற்காசு வைத்துள்ள நீங்கள் 50 பொற்காசுகளைத் தருவதாகச் சொல்கிறீர்கள். நீங்கள் சரியான கஞ்சன். புகழ்ந்து பாடத் தகுதியற்றவர் நீங்கள்" என்றார்.

"500 பொற்காசுகள் தருகிறேன்" என்றார் செல்வந்தர்.

"500 பொற்காசுகளை நீங்கள் எனக்குத் தந்துவிட்டால், நாமிருவரும் சமமானவர்களாகிவிடுவோம். எனக்குச் சமமானவர்களை நான் புகழ்ந்து பாடமாட்டேன்"



செல்வந்தருக்கு சங்கடமாகப் போயிற்று. தன்னைப் புகழ்ந்து புலவர் பாட வேண்டும் என்ற ஆர்வத்தில் செல்வந்தர் சொன்னார்:

"என் ஆயிரம் பொற்காசுகளையும் தந்துவிடுகிறேன். என்னைப் புகழ்ந்து பாடுங்கள்"

"என்னிடம் எல்லாப் பொற்காசுகளையும் தந்த பின்னர் நீர் முழுப் பிச்சைக்காரர். உம்மை எப்படிப் புகழ்ந்து பாடுவது?" என்று கேட்டார் புலவர்.

# கனவு ஜெயிக்க வேண்டும் என்றால் கண்ணை மூடி தூங்காதே!

உலகிலே மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவரிடமும் ஏதோ ஒரு திறமை இருக்கின்றது. அதனை உணர வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. கனவு காணுங்கள் என்று முன்னாள் இந்திய ஜனாதிபதியும் பிரபல அணு விஞ்ஞானியும் ஆன டாக்டர் அப்துல் கலாம் சொல்லுகின்றார். இதனையே அமெரிக்காவின் பதினாறாவது ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், எண்ணம் போல வாழ்வு என்கின்றார். இந்துக்களின் கடவுள்களில் ஒருவரான கிருஷ்ண பரமாத்மா "நீ எதுவாக நினைக்கிறாயோ அதுவாகின்றாய்" என்கின்றார்.



எண்ணம் என்பதிலே முழுமையான உண்மை இருக்கின்றது. அதனை அனுபவ ரீதியாகவும் கல்வி அறிவு மூலமாகவும் உணரக் கூடியதாக உள்ளது. பெரியோர்கள் மற்றும் ஆசிரியர்கள் எங்களை வாழ்த்தும்போது நாம் உயர்ச்சி பெறுகின்றோம். அதே போல ஒருவர் எங்களை சபிக்கும் போது அதற்கு பின் விளைவு இருக்கின்றது. ஒரு செயலைப் பார்த்து ஏனையோர் மகிழ்ச்சி அடையும் போது அல்லது பொறாமைப் படும்போது அந்த எண்ண அலைகள் அவரைத் தாக்குகின்றன.

நான் இங்கு கூற வந்த கனவு என்பது நாங்கள் தூங்கும் போது வருகின்ற கனவு அல்ல. எங்களைத் தூங்க விடாமல் தடுக்கும் கனவுதான். இன்று இந்த உலகத்திலே சாதனைக்கு எல்லாம் சொந்தமாகவுள்ள அனைவரும் இவ்வாறான இலட்சியப் பொறிகளை தங்கள் மனதிலே கொண்டிருந்தார்கள். தமிழ் திரை உலகத்திலே சூப்பர் ஸ்டாராக இருக்கும் ரஜனிகாந்த் தனது 25 ஆவது வயதிலே ஒரு பேருந்து நடத்துனராக இருந்தார். அவருக்கு சில பலவீனங்கள் இருந்தன உயரமான தோற்றம் சிறிய காது சின்ன கண்கள். ஆனால் அவர் தன்னுடைய பலத்தை கண்டு கொண்டார். எதையும் ஸ்டைலாக செய்யக் கூடியவர். தனது பலம் மூலம் பலவீனத்தை மறைத்தார். இதனையே சுவாமி விவேகானந்தர் நாம் பலமாக சிந்தித்தால் தான் எங்களுக்கு வாழ்வு, பலவீனமாக சிந்திப்போமாயின் மரணம் என்றார்.

எந்த சாதனை மனிதர்களின் வாழ்வை புரட்டிப் பார்க்கும் போதும் அவர்கள் கடந்து வந்த பாதை கடினமானதுதான். உலகத்துக்கு செயற்கை ஒளியைத் தந்த தோமஸ் அல்வா எடிசன் தோல்விகளுக்கு மத்தியில்தான் கண்டு பிடித்தார். நாங்கள் வெற்றிப் பாதையில் போகும்போது நிச்சயமாக சறுக்கல்கள் வரும் ஆனால் நாம் பின்வாங்கக் கூடாது. எதிர்த்து நீச்சல் போட வேண்டும். ஒவ்வொரு தடைக் கல்லையும் படிக் கல்லாக மாற்றுங்கள்.

சாதனை என்பதற்கு ஒரு சமன்பாடு இருக்கின்றது. சாதனை = சோதனை + வேதனை. சாதிக்க நினைப்பவனுக்கு சோதனைகள் வரும். துவண்டு போகாதீர்கள். முயலுங்கள் முயன்றால் எதுவும் முடியும். இன்று பல மாணவர்கள் தங்கள் வாழ்க்கையை தீய பழக்கங்கள் மூலம் தொலைக்கின்றார்கள். இளைமை என்பது எங்கள் உயிர் வாழ்விலே மிகப் பெறுமதியானது. அந்தக் காலத்திலே தான் நிறைய விடயங்களை தேட முடியும். தேடல் என்பது உள்ளவரை தினமும் பசி இருக்கும் என்கின்றான் கவிஞன்.


ஒவ்வொரு மனிதனுக்கும் இலக்கு இருக்க வேண்டும். இலக்கு மட்டும் இருந்தால் போதாது கடின முயற்சியும் அதோடு தேடலும் இருந்தால் வெற்றி நிச்சயம். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். என்னால் முடியும் என்ற கொள்கையை வளருங்கள். உங்கள் கனவு என்னவாக இருந்தாலும் ஒரு நாள் நனவு ஆகும்.

**மாவை ஸ்ரீ ரஜீவன்**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக் கழகம்**

அவர் காலத்தில் வந்த மற்ற நடிகர்கள் மிகுந்த சிரமப்பட்டுத்தான் சினிமாவில் கதாநாயகனாக ஆக முடிந்தது. ஆனால் ரவிச்சந்திரன் மட்டும் முழுக்க அதிர்ஷ்டம் காரணமாக காதலிக்க நேரமில்லை(1964) படத்தில் அறிமுகமானார்.

காதலிக்க நேரமில்லையை அடுத்து இதயக்கமலம்(1965), அதேகண்கள்(1967), நான்(1967), மூன்றெழுத்து(1968) போன்ற கலர்ப்படங்களில் நடித்து கலர் கதாநாயகன் என்று கிராமத்து மக்களிடம் பிரபலம்.

நடிகை காஞ்சனா ரசிகர்களால் கலர் காஞ்சனா என்றே அழைக்கப்பட்டார்.





# நடிகர் ரவிச்சந்திரன்

ஜெய்சங்கர் - ரவிச்சந்திரன் இரண்டு பேரும் அன்றைக்கு இருமை எதிர்வுகள்!

ஜெய்சங்கருக்கு நடிக்க வந்து இரண்டு வருடத்தில் ஒரே ஒரு படம் "பட்டணத்தில் பூதம்" (1967) தான் அப்போது கலர் படம்.

அன்று வண்ணப்படம் என்பது கொஞ்சம் அபூர்வம்!

ராமண்ணாவின் படம் குமரிப்பெண்(1966) வெளியானது. ராணி பத்திரிகை ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு "ரவிச்சந்திரனா? ராமச்சந்திரனா?" என்று எம்.ஜி.ஆர் படம் பார்த்த பரவசம் ஏற்பட்டதாக எழுதியது!

காதலிக்க நேரமில்லை, இதயக்கமலம், அதே கண்கள், நான் ஆகிய படங்கள் எப்போது பார்த்தாலும் சலிக்காதவை.

இதயக்கமலம் சீரியஸ் படம் தான். ஆனால் பி.பி.ஸ்ரீநிவாஸின் "நீ போகுமிடமெல்லாம் நானும் வருவேன் போ போ" "தோள் கண்டேன், தோளே கண்டேன்" பி.சுசிலாவின் மோகன ராக "மலர்கள் நனைந்தன பனியாலே" போன்ற அற்புதமான பாடல்கள். எல்.வி.பிரசாத் இயக்கம். கே.ஆர்.விஜயா தான் நடித்த படங்களில் பிடித்த படமாக இதயக்கமலத்தை தான் சொல்வது வழக்கம்.

மதராஸ் டு பாண்டிச்சேரி(1966), நினைவில் நின்றவள்(1967), உத்தரவின்றி உள்ளே வா(1971) முழு நீள நகைச்சுவைப் படங்கள்.

**- R.P. ராஜநாயஹம்**

1971 வருடம் தான் ஜெய்சங்கருக்கு இரண்டாவது வண்ணப்படம் ரவிச்சந்திரனுடன் நடித்த "நான்கு சுவர்கள்", மூன்றாவது வண்ணப்படம் "வீட்டுக்கு ஒரு பிள்ளை"! ஆனால் பட வாய்ப்புகள், வருமானம், அந்தஸ்து போன்ற விஷயங்களில் ஜெய்சங்கர் தான் கிங். ரவிச்சந்திரன் அறிமுகமாகி ஒரு வருடம் கழித்து 1965இல் இரவும் பகலும் மூலம் நடிக்க வந்தவர் ஜெய் என்றாலும் இவர்கள் சேர்ந்து நடித்த நாம் மூவர், கௌரி கல்யாணம், காதல் ஜோதி, நான்கு சுவர்கள், அக்கரைப்பச்சை போன்ற படங்களில் முதல் கதாநாயகன் ஜெய்சங்கர் தான். டைட்டிலில் முதல் பெயர் ஜெய்சங்கர் தான்.

அதே போல ஜெய்சங்கர் வில்லன் ரோல் செய்து முரட்டுக்காளை யிலிருந்து வேறு நடிகர் ஆன பின்னும் ரவிச்சந்திரன் அதே பாணியில் மாறிய போதும் ஜெய்சங்கருக்குத் தான் அதிக வாய்ப்புகள் வாய்த்தன.

வில்லனாக ரவிச்சந்திரன் ஊமை விழிகளில் நடித்ததை மறக்கமுடியாது. அதே படத்தில் ஜெய்சங்கருக்கு குணச்சித்திர வேடம் - பி.பி.எஸ் பாடல் "தோல்வி நிலையென நினைத்தால் வாழ்வை நினைக்கலாமா?"



ஷீலா

காதலிக்க நேரமில்லை படத்தை 100 தடவை சித்ராலயா கோபுவும், ரவிச்சந்திரனும் பார்த்தார்களாம்.

முத்துராமன், ஏ.வி.எம்.ராஜன் போல கடுமையாய் போராடாமல், ஜெய்சங்கர் போல சிரமப்படாமல் ஓவர் நைட் ஹீரோவான பிரமிப்பு ரவிச்சந்திரனை விட்டு கடைசி வரை நீங்கவில்லை.

நடன அசைவுகள் ரவிச்சந்திரன் நன்றாகச் செய்வார். டப்பாங்குத்து, குத்தாட்டமும் வரும்.

"கண்ணுக்கு தெரியாதா நெஞ்சுக்குப் புரியாதா"

"பொம்பள ஒருத்தி இருந்தாளாம் பூதத்தை பாத்து பயந்தாளாம்."

"ராஜா கண்ணு போகாதடி நீ போனா நெஞ்சுக்கு ஆகாதடி"

சண்டைக் காட்சிகளில் உணர்ச்சி வசப்பட்டு அடித்தே விடுவார் என்று ஸ்டண்ட் நடிகர்கள் சொல்வார்கள்.

ரவிச்சந்திரன் முதல் மனைவி விமலாவுக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள்.

ஷீலா இரண்டாவது மனைவியான பின் "மஞ்சள் குங்குமம்"(1973) ரவிச்சந்திரன் அவரது டைரக்ஷனில் நடித்தார். எஸ்.பி.பி.யின் "என் காதல் கண்மணி ஏதேதோ நினைத்தாளோ சொல்ல நாணம் வந்ததோ சொல்லாமல் மறைத்தாளோ ராதா" பாடல் இந்தப்படத்தில்.

ஷீலாவுக்கு ஒரு மகன். ஜோர்ஜ். இந்த உறவு நீடிக்கவில்லை.

ஷீலாவின் உறவு காரணமாக ரவிச்சந்திரன் அன்று சில மலையாளப்படங்களில் கதாநாயகனாக நடிக்க முடிந்தது. முத்துராமனுக்கோ, ஜெய்சங்கருக்கோ, ஏ.வி.எம் ராஜனுக்கோ மலையாளப்பட கதாநாயகனாக வாய்ப்பு கிடைத்ததில்லை.



ஹம்ஸவர்த்தன்

ரவிச்சந்திரனின் வாரிசுகள் ஜோர்ஜும், ஹம்ஸவர்த்தனும் சினிமாவில் முயற்சி செய்தும் நிலைத்து நிற்க முடியவில்லை.

ஹம்ஸவர்த்தனை திரையில் நிறுத்த ரவிச்சந்திரன் பெரு முயற்சி செய்தார். இவரே மகனுக்காக படம் தயாரித்தது சரி. ஆனால் இவரே அந்தப் படத்தை பிடிவாதமாக இயக்கியது தான் மிகப்பெரிய தவறு.

# இங்க்லிஷ் விங்க்லிஷ்: எளிதாகப் புரியும் மொழி

**மொழி** தரும் அழுத்தம் பற்றிய முழு நீளத் திரைப்படம் இதுவரை வெளியாகவில்லை என்று சொல்லலாம். கற்றது தமிழ் படத்தில் தமிழ் கற்றவன் படும் அவஸ்தைகள் பேசப்பட்டன என்றாலும் ஆங்கிலம் தெரியாமல் அம்மொழி புழங்கும் இடங்களில் சங்கடத்தை எதிர்கொள்ளும் எளியவர்களின் வலி சினிமாவில் பெரிதாகப் பதிவாக வில்லை. இந்திய வணிக சினிமாவின் நாயகன் அவ்வளவாக ஆங்கிலம் அறியாதவன் அல்லது நன்கு படித்துவிட்டு தகுதிக்கு குறைவான வேலை பார்ப்பவன். அவனுடன் மோதி பின்னர் காதல்




வயப்படும் நாயகிகள் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் படிப்பை முடித்துவிட்டு பல வருடம் கழித்து கிராமம் திரும்பியவர்கள். திமிரான அவள் நாயகனை அவமானப்படுத்த அவன் அறியாத ஆங்கிலத்தில் பேசி இகழ்வதும், நாயகன் ஒரு கட்டத்தில் பொறுக்கமாட்டாமல் திக்கித் திணறியோ அல்லது அவன் படித்தவனாக இருக்கும் பட்சத்தில் நாயகியை விட சரளமான ஆங்கிலத் தில் பேசியோ ரசிகர்களின் கைதட்டலையும், நாயகிகளின் காதலையும் ஒரு சேரப்பெற்று விடுவான். ஆனால் அதற்கு பிறகு காதலியும், அவனும் கவிதை மொழியில் காதல் புரியத் தொடங்கி விடுவார்கள் என்பதால் ஆங்கிலத்தின் அச்சுறுத்தல் இருக்காது. இந்நிலையில் ஆங்கிலம்

- வெ. சந்திரமோகன்

தெரியாத ஒருவர் படும் சிரமங்களை வைத்து முழுநீளப் படமாக வெளிவந்திருக்கிறது இங்க்லிஷ் விங்க்லிஷ் ஸ்ரீதேவி பல வருடங்களுக்குப் பின்னர் நடித்திருக்கும் படம், சீனி கம் மற்றும் பா படங்கள் மூலம் ஹிந்தியில் அழுத்தமாக முத்திரை பதித்த இயக்குனர் பால்கியின் தயாரிப்பு என்று நிறைய எதிர்பார்ப்புகளுடன் வெளியாகிய படம்.

இரு குழந்தைகளின் தாய். வசதியான வீட்டில் மருமகள் என்றாலும் ஆங்கிலம் சரளமாகப் பேச வராத அதற்கான தேவையும் இல்லாத சராசரி இந்திய குடும்பத் தலைவி. ஆங்கிலம் நுனிநாக்கில் பேசும் கணவனும் ஆங்கில மீடியத்தில் படிக்கும் பதின்வயது மகளும் அந்த எளிய பெண்ணின் தவறான ஆங்கில உச்சரிப்பை கேலி செய்பவர்கள். அவளால் சிறப்பாக லட்டு மட்டும்தான் தயாரிக்க முடியும் என்று நினைக்கும், கணவன் பேச்சால் அடிக்கடி புண்படும் அவளுக்கு, திடீரென்று அமெரிக்காவுக்கு, அதுவும் தனியே போக வேண்டும் என்ற நிர்பந்தம். எளிய இந்தக் கதையை தெளிவான திரைக்கதை மூலம் பலப்படுத்தி இருக்கிறார் இயக்குனர் கவுரி ஷிண்டே.

இந்தப் படத்தின் கதை, தாயான எளிய மராத்தி பெண்ணிடம் ஒரு மகளாக தான் நடந்துகொண்ட விதத்தை பின்புலமாகக் கொண்டது என்கிறார் அவர். முதல் தலைமுறையாக உயர்கல்வி பெறுபவர்கள் அல்லது ஆங்கிலக் கல்வி பெறுபவர்கள் அவ்வளவு படிப்பறிவில்லாத தங்கள் அன்பான பெற்றோர்களை பல சந்தர்ப்பங்களில் ஏதாவது ஒரு விதத்தில் காயப்படுத்தி இருப்பார்கள். சற்றே முதிர்ச்சியடைந்த பின்தான் தங்கள் தவறு தெரிய வரும். கவுரிக்கும் தன் தாயை ஆங்கிலம் தெரியாத காரணத்துக்காக காயப்படுத்தியதை பற்றிய குற்ற உணர்வு இருந்திருக்கிறது. அந்தக் குற்றவுணர்வின் திரைமொழிதான் இங்க்லிஷ் விங்க்லிஷ்.

கிட்டத்தட்ட அரைநூற்றாண்டு திரை அனுபவம் கொண்ட ஸ்ரீதேவிக்கு இந்தப்படம் சிறப்பான மீள் வருகைதான். அவருக்கு ஐம்பது வயதாகப் போகிறது என்கிறது விக்கிப்பீடியா. நடிகையின் உண்மையான வயது என்பது இந்தியத் திரையுலகில் ஒரு கற்பனைப் பதம்தான். ஏனென்றால் இருபதின் இறுதியைத் தொட்டு விட்டாலே முன்னணி நடிகைகளுக்கு அக்கா, அண்ணி வேடங்களுக்கு தயார் செய்துவிடும் இந்தியத் திரையுலகம். குறிப்பாக தமிழில் அவ்வாறுதான் நிகழ்கிறது. ஒரு காலத்தில் நாற்பது வயதில் பத்மினியால் தில்லானா மோகனாம்பாள் நடிக்க முடிந்தது. தற்போதைய ரசிகர்கள் நடிகைகள் கட்டுடல் கொண்ட இளம் பெண்களாகவே இருக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்கள் என்பதால் நடிகைகளுக்கு தங்கள் வயதை குறைத்து காட்ட வேண்டிய அவசியம். நடிகர்கள் தங்கள் வயதை குறைத்துக் காட்டுவதை கண்டித்து கரகாட்டக்காரனில் கவுண்டமணி கலகக் குரலே எழுப்பி இருப்பார். சமீபத்தில் டைம்ஸ் ஒப் இந்தியா இதழில் வெளியான கட்டுரை ஒன்று ஹிந்தி சினிமாவின் தற்போதைய முன்னணி நடிகைகளான கரீனா கபூர், ராணி முகர்ஜி போன்றவர்களின் சமீபத்திய படங்களில் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள படு கவர்ச்சியாக நடிக்க முயல்கின்றனர் என்று குறிப்பிட்டிருந்தது. காரணம் முப்பதுகளின் மத்திக்கு போய் விட்டால் கதாநாயகி அந்தஸ்து இங்கே தகர்ந்து விடும். வயது அத்தனை முக்கியம் இங்கே. தொலைக்காட்சி சனல்களில் இருபத்துநாலு மணிநேரமும் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் பாடல்கள்தான் படங்களின் விளம்பரப் பணியை சிறப்பாகச் செய்கின்றன. அதில் இடுப்பசைவுடன் நாயகியின் நடனம் அவசியம் என்பதால் சற்று வயது முதிர்ந்த நடிகைகளுக்கு அங்கு இடம் இல்லை.

பல வருடங்கள் கழித்து திரும்பவும் நடிக்க வரும் ஸ்ரீதேவி தன் வயதுக்கும் திறமைக்கும் உரிய பாத்திரம் கிடைத்திருப்பதில் அதிர்ஷ்டசாலி என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் ஒரு காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்தை தன் அழகிய பல் வரிசை சிரிப்பு மற்றும் அசத்தும் நடனம் மூலம் கட்டிப்போட்டிருந்த மாதுரி தீட்சித்தின் மீள்வருகைப் படமாக வெளியான 'ஆஜா நாச் லே' படு தோல்வி அடைந்தது. அவர் அதில் இளம் வயதுத் தோற்றத்தில் வருவது போன்ற காட்சிகள் ரசிகர்களால் ஏற்கப்படவில்லை. ஸ்ரீதேவி இதில் கவனமாக நடுத்தர வயதுப் பெண்ணாகவே வந்து தோல்வியை தவிர்த்திருக்கிறார்.

பையன் வேண்டுகோளுக்கு இணங்கி மைக்கேல் ஜாக்சன் ஸ்டெப் ஆடிவிட்டு அது ஒரு விஷயமே இல்லை என்பது போல் இயல்பாக நடந்து செல்லும் காட்சியில் அவர் ஆடாத நடனமா என்று நினைக்கத் தோன்றுகிறது. அதே போல் முதல் முறை அமெரிக்காவுக்கு விமானப் பயணம் என்பதால் தடுமாறும் அவரிடம் பக்கத்து சீற்காரரான அமிதாப் (தமிழில் அஜித்) ஆங்கிலப் படத்தை தமிழில் 'மொழியாக்கம்' செய்து விவரிக்க அங்கு நடைபெறும் சின்ன கலாட்டாவை கண்டு ஆச்சரியமும் சிரிப்பும் பொங்க தன் முகத்தை ப்ளாங்கெட்டால் மூடிக் கொள்ளும் காட்சியில் அந்தக் கண்கள் மொத்த உணர்வையும் காட்டி விடுகின்றன.

ஒரு வணிகப்படமாகவே வெளியாகி இருந்தாலும் சில முக்கியமான சேதிகளை இயல்பாக முன் வைக்கிறது இங்கிலிஷ் விங்க்லிஷ். பெற்ற குழந்தைகளாலேயே அவ்வப்போது அவமானப் படுத்தப் படும் பெற்றோர்கள் (ஸ்ரீதேவி சொல்வது போல் முக்கியமாக - தாய்) மனதில் ஏற்படும் வலி, ஆங்கிலம் சரியாகத் தெரியாதவர்களுக்கு உறவினர் மற்றும் நட்பு வட்டாரத்தில் ஏற்படும் அவமானங்கள், வேலைக்கு அல்லது பயிற்சிக்கு செல்லும் குடும்பப் பெண்கள் எதிர்கொள்ளும் எதிர்பாரா மையல்கள் என்று பல விஷயங்கள் இந்தப் படத்தின் ஓட்டத்தில் மெல்லிய இழைகளாக தொடர்கின்றன. சிவந்த மண்ணுக்கு பிறகு வெளிநாடுகளில் படமாக்கப் படும் படங்களில் அந்த நாட்டை பற்றிய பிரமிப்பு இருக்கும். நாங்கள் இருப்பது வெளிநாடாக்கும் என்ற பாவனை நடிகர்களிடம் இருக்கும். காரியாப்பட்டி கதாநாயகன் காதல் வந்தவுடன் விசா,பாஸ் போர்ட் இன்றி கனடா சென்று வெள்ளைக்காரப் பெண்களுடன் நடனமாடுவது வழக்கமாகி விட்டது. இந்தப் படம் முதல் தடவை அமெரிக்கா செல்லும் பெண்ணின் பிரமிப்பை அழகாகக் காட்டியிருக் கிறது.

அமெரிக்க ரெஸ்டோரன்ட் ஒன்றில் ஆங்கிலம் சரியாகப் பேச முடியாமல் அவஸ்தைப்படும் ஸ்ரீதேவி ஒரு கட்டத்தில் பதட்டம் அதிகரித்து அங்கிருந்து வெளியே ஓடி வரும்போது பரிதாபத்தை ஏற்படுத்துகிறார். பிறகு ஆங்கிலம் பயிற்றுவிக்கும் ரியூஷன சென்டர் ஒன்றுக்கு செல்வதும் அங்கு வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து வந்து தங்கள் வாழ்க்கையை அமெரிக்காவில் நிலைப்படுத்தவென்ற ஆசையுடன் ஆங்கிலம் கற்க வந்திருக்கும் மனிதர்களை சந்திக்கிறார். மெல்ல மெல்ல ஆங்கிலம் கற்கும் ஸ்ரீதேவிக்கு அவரது சகோதரியின் மகள் ஆறுதலாக இருக்கிறார். ஆங்கிலத்தில் தன் சித்திக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து வைக் கிறார்.

அவரது ஆங்கில வகுப்பின் கடைசி நாளில் தான் ஸ்ரீதேவியின் சகோதரியின் மகளுக்கு திருமணம்.

திருமணத்தின் விருந்தின்போது அமெரிக்க மணமகனின் தந்தை 'இனி உங்கள் பாடு. இனியாவது என்னையும் உன் அன்னையையும் தனியாக விட்டு விடு. இனிமேல்தான் நாங்கள் ஒருவர் மீது இருவர் கவனம் செலுத்த வேண்டும்' என்று வேடிககையாகப் பேச, கடைசியாக ஸ்ரீதேவியை பேச அழைக்கிறார் அவரது சகோதரி மகள். வழக்கம் போல் தன் மனைவிக்கு ஆங்கிலம் தெரியாது என்று தன்னை பேச அனுமதிக்காத கணவனிடம் ஸ்ரீதேவி கேட்பார் 'May I?'. பிறகு வாழ்க்கையில் தம்பதிகள் ஒருவரையொருவர் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்று மணமக்களுக்கு சொல்வது போல் கணவனுக்கும் மறைமுகமாக சொல்கிறார். அந்தக் காட்சியில் தெளிவாக காட்டபபடுவது பேசும் மொழி அல்ல சொல்லப்படும் விஷயம்தான் பிரதானம் என்று. வழக்கமான சினிமா பாணியில் சரளமாக ஆங்கிலம் பேசி விடாமல்



எளிய ஆங்கிலத்தில் அந்த உரையை நிகழ்த்தியதும் கூடியிருக்கும் உறவினர்கள் மட்டுமல்லாமல் தாங்களாகவே அந்த திருமணத்துக்கு வந்திருக்கும் ஆங்கில வகுப்பு மாணவர்களும் ஆசிரியரும் அடையும் சந்தோசம் அளவற்றது. நிறைவான அந்தக் காட்சியில் ஸ்ரீதேவியின் கணவரும் மகளும ஆங்கிலம் தெரியாது என்று தாங்கள் இகழ்ந்த ஸ்ரீதேவி முன்பு நெகிழ்வுடன் தலைகுனிகிறார்கள்.

நேர்கோடான எளிய திரைக்கதை மூலம் படத்தை வெற்றி பெறச் செய்திருக்கும் கவுரி ஹிண்டே பெண் இயக்குனர் என்ற சலுகையெல்லாம் எதிர்பார்க்காமல் ஒரு அழகான வணிகப் படம் தந்திருப்பது வரவேற்புக்குரியது.

# இந்திய வீடமைப்பு வடமராட்சியில் துரிதம்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி, பருத்தித்துறை மற்றும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேறிய மக்களுக்கான இந்திய வீட்டுத் திட்டம் யு.என். கபிராட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்திய வீட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளின் போது மருதங்கேணி, பருத்தித்துறை மற்றும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து சிபார்சு செய்யப்படும் குடும்பங்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் பயனாளிகள் தெரிவின் அடிப்படையில் இந்த வீட்டுத் திட்டம் குறித்த யு.என். கபிராட் நிறுவனத்தின் திட்டமிடலின் கீழ் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது.

இதேவேளை நேற்று முதல் தெல்லிப்பழை, நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கான இந்திய வீட்டுத் திட்ட திட்டமிடல் செயலகம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் மேல்மாடியில் இயங்கிவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# யுனிசெவ் பிரதிநிதியுடன் ஆளுநர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி றிசா கொசானி வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை யாழ்பபாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.



வடமாகாணத்தில் யுனிசெவ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன் அடுத்தாண்டு வடமாகாணத்தில்யுனிசெவ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.

# மாணவனின் உயிர் குடித்த இரத்தப் புற்றுநோய்

(வலிகாமம்)


வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் தரம் - 8 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் இரத்தப் புற்றுநோய் காரணமாக மரணமடைந்துள்ளான். இச்சம்பவம் கடந்த 22 ஆம் திகதி பகல் 12.00 மணிக்கு நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

உடுவில் மேற்கு, சந்திரபுரம் எனும் முகவரியில் வசித்துவரும் கோபாலகிருஷ்ணன் மனோரஞ்சினி தம்பதிகளின் புதல்வன் கஜந்தன் என்ற மாணவனே இப்புற்றுநோயால் மரணமடைந்தவராவார்.

கடந்த 3 மாதங்களுக்கு மேலாக கழுத்தில் கட்டி ஏற்பட்டதன் காரணமாக இந்த மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையிலும் மகரகம புற்றுநோய் வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வந்ததாகவும், இந்த மாணவனுக்கு ஏற்பட்டிருப்பது இரத்தப் புற்றுநோய் என வைத்தியர்கள் அறிவித்ததாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் கடந்த 21 ஆம் திகதி மேற்படி மாணவன் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றதாகவும் வைத்தியர்கள் அந்த மாணவனுக்கு சிகிச்சை பயனளிக்காது என்று கூறி வீட்டுக்கு அனுப்பிவைத்ததாகவும் பாடசாலை சமூகத்தினர் தெரிவிக்கின்றனர்.

மறுநாள் இந்த மாணவன் நோய் முற்றி பகல் 12.00 மணிக்கு வீட்டில் மரணமானதாகவும் தெரியவருகிறது. இவரது தந்தையும் புற்றுநோய் காரணமாகவே சில வருடங்களுக்கு முன்னர் இறந்துள்ளதாகவும் தெரியவருகிறது. (06)



வலிகாமம் கல்வி வலய ஆரம்ப பாடசாலை மாணவர்களிற்கான பரிசளிப்பு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.


இந்நிகழ்வில் வலிகாம வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ். கந்தசாமி மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், அருகில் ஆசிரிய ஆலோசகர் திருமதி மயில்வாகனம் நிற்பதையும் 'வேட்டைக்காரன்' சிறுவர் நாடகத்தில் நடித்த இராமநாதன் கல்லூரி மாணவர்களையும் காணலாம். (06)



# ஆயுர்வேதம்

## சரக சமஹிதை-4

- நரோபா




மூலிகைகளின் பெயர்களையும் அடையாளங்களையும் மட்டும் தெரிந்து வைத்துக் கொள்வதால் ஒருவன் சிறந்த மருத்துவன் என்று சொல்ல முடியாது என்கிறார் சரகர் - எவனொருவன் காலம், தேசம், நோயாளியின் உடல், நோயின் தன்மை ஆகியவற்றை பூரணமாக உணர்ந்து ஒவ்வொரு நோயாளிக்கும் தகுந்த வகையில் மருத்துவம் செய்கிறானோ அவனே சிறந்த மருத்துவன். புருஷம் புருஷம் வீக்ஷ்ய - எனும் இந்த ஒரு வாக்கியம் ஆயுர்வேத மருத்துவத்தின் ்மிக முக்கியமான அடிப்படைகளில் ஒன்று. ஒவ்வொரு மனிதனும் தனித்துவம் கொண்டவன், ஆகவே அவனுக்கான மருத்துவமும் அப்படித்தான் இருக்க முடியும். காய்ச்சல் என்று எடுத்துக்கொண்டால், அதில் எத்தனை வேறுபாடுகள்! உடல் வெப்பம் அதிகமடைகிறது எனும் ஒற்றை பொது பண்புக்குப்பின் அது எத்தனையோ விஷயங்களை சுட்டலாம். மருத்துவனின் திறன் என்பது அதிலிருந்து அல்லது அந்த அடிப்படையை மனதில் கொண்டு அவன் சரியாக தேர்ந்தெடுக்கும் மருந்தில் உள்ளது. ஒற்றைக் கல்லில் குறிபார்த்து மரத்தில் பழுத்து நிற்கும் மாங்கனியை அடித்து வீழ்த்துவது போல் துல்லியமாக இருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலும் ஒரு சாக்கு நிறைய கற்களை ஒட்டு மொத்தமாக வீசும் பாணியே இன்று பின்பற்றப்படுகிறது. எந்த கல் அந்தக் கனியை வீழ்த்தியது என்பது கல் எறிந்தவனும்கூட அறியமாட்டான்.

மனதிற்கும் உடலுக்கும் உள்ள தொடர்பை பற்றி ஆயுர்வேதம் ஆழமாக விவாதிக்கிறது. சுரம் முதல் மேக நோய் வரை அனேக நோய்களுக்கு காமம், குரோதம், மோகம், பயம் போன்ற மனம் சார்ந்த காரணிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அதேபோல் உன்மத்தம் போன்ற மன நோய்க்கு உணவு தொடர்பான காரணிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. ஒரு அத்தியாத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்கள் என சிலவற்றை ஆச்சார ரசாயனம் எனும் பெயரில் பட்டியலிடுகிறார், அவைகளை பின்பற்றுவதன் மூலம் நோயற்று நூறாண்டுகள் வாழமுடியும் என்கிறார்.

சிகிச்சை யாருக்கு? உடலுக்கா? உடலில் பொதிந்திருக்கும் மனதிற்கா? மனம்தான் மனிதனா? ஆனால் மனம் எண்ணுவதை ஏதோ ஒன்று கவனிக்கிறதே அது என்ன? ஆன்மாவிற்கு நோய் பீடிக்குமா? ஏன் சிலருக்கு ஆண் குழந்தை பிறக்கிறது? ஏன் சிலருக்கு பெண் பிறக்கிறது? ஆன்மாவிலிருந்து ஆன்மா பிறக்கிறதா? என விரியும் கேள்விகள் ஆழமானவை, அதற்கான விடைகளை, நாம் அறிவியலிலும், தத்துவத்திலும், யோகத்திலும் அறிய முற்படலாம். ஆயுர்வேதம் அளிக்கும் விளக்கங்களும் அற்புதமானவை.

இந்த்ரிய ஸ்தானம், மரணத்தை பற்றியும், அதை அறிவிக்கும் குறியீடுகள் பற்றியும் விரிவாக பேசுகிறது. இந்த்ரியம் என்றழைக்கப்படும் புலனுறுப்புகளை கொண்டு மரண குறிகளை அறிய முற்படுவதால் ஏற்பட்ட காரணப் பெயர்தான் இந்த்ரிய ஸ்தானம். மனிதரின் இயல்பான குரல், நிறம் போன்றவைகளை சொல்லிவிட்டு, அதிலிருந்து விலகுபவைகளையும் சொல்கிறார் சரகர். ஹம்சம் (அன்னம்), துந்துபி மேளம், கபோதம் (புறா) போன்றவற்றின் குரலை ஒத்த குரல் மனிதர்களுக்கு இயல்பானது என்று சொல்கிறார். அடுத்து உருவாகவிருக்கும் கனியை நமக்கு செடியில் பூக்கும் மலர் உணர்த்துவது போல், உடலில் இருந்து எழும் நறுமணங்களை கொண்டு நாம் மரணத்தை உணர்ந்துகொள்ளலாம் என்கிறார் அவர். நவீன மருத்துவத்திலும் கீடோசிஸ் போன்ற நோய் நிலைகளுக்கு தனித்துவமான அழுகிய பழவாடை உண்டு. இந்த ஸ்தானத்தில் குறிப்பிடப்படும் அறிகுறிகள், மரணத்தை அறிவிக்கின்றன என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அதை நாம் நோயறிதலில் பயன்படுத்தலாம் என்பதே முக்கியம். ஒரு நோய் கவனிக்கப்படாமல், அப்படியே விடப்பட்டால் என்னவாகும்? அதன் இறுதி குறிகள் எப்படி இருக்கும்? இது போன்ற கேள்விகளை இந்த பகுதி பேசுகிறது.

(தொடரும்)

# மன்னார் சமாதான செயற்பாட்டுக் குழு

# அம்பாறைக்கு நல்லெண்ண விஜயம்



(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திற்கு 3 நாள் விஜயத்தை மேற்கொண்ட மன்னார் மாவட்ட சமாதான செயற்பாட்டுக் குழுவினர், அங்குள்ள சமாதான செயற்பாட்டுக் குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

மன்னார் மாவட்ட சமாதான செயற்பாட்டுக் குழுவின் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் 9 பேரைக் கொண்ட மன்னார் மாவட்ட சமாதான செயற்பாட்டுக் குழுவினர் அம்பாறைக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டனர். கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைவரை மன்னார் மாவட்ட சமாதான செயற்பாட்டுக் குழுவினர் அம்பாறையில் தங்கியிருந்தனர்.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மாவட்ட மட்டத்தில் சமாதான செயற்பாட்டுக் குழுக்களுக்கு இடையிலான நல்லெண்ண விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு நடவடிக்கையாகவே மன்னார் மாவட்ட சமாதான செயற்பாட்டுக் குழுவினர் அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டனர்.

இதேவேளை, இந்தக் காலப் பகுதியில் மொனராகலை மாவட்டத்திலிருந்தும் சமாதான செயற்பாட்டுக் குழுவினர் அம்பாறைக்கான விஜயத்தை மேற்கொண்டனர்.



**மட்டக்களப்பு தாழங்குடாவில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரியில் மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான ஓவியக்கூடம் காண்போரை வியக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு தாழங்குடா தேசிய கல்வியியற் கல்லூரியின் முப்பெருவிழா நேற்றுமுன்தினம் கோலாகலமாக கல்லூரியின் மண்டபத்தில் இடம் பெற்றது.**

# மன்னார் மீனவர்கள் தொடர்ந்தும் பாதிப்பு

(கொழும்பு)

தென்பகுதி மீனவர்கள் மன்னார் சௌத்பார் கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதன் காரணமாக மன்னார் மாவட்ட கரையோர மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருவதாக மன்னார் பனங்கட்டிக்கோட்டு மீனவ சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

65 தென்பகுதி மீனவர்களுக்கு மாத்திரமே மன்னார் சௌத்பார் கடற்பரப்பில் தொழில செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால், மன்னார் மாவட்டத்தில் உள்ள எந்த மீன்பிடி அமைப்புக்களினது அனுமதியும் இன்றி கடற்படையினர் மற்றும் இராணுவத்தின் ஆதரவுடன் நூற்றிற்கும் மேற்பட்ட தென்பகுதி மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.


இந்த் பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் பல்வேறு தரப்பினரிடமும் முறையிட்டுள்ளோம்..

ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது சௌத்பார் கடற்கரை பகுதியில் அவர்கள் நிரந்தரமாக மீன் வாடிகளை அமைத்துள்ளதன் காரணத்தினால் அந்த பகுதியில் உள்ள எமது மீனவர்கள் கரை வலைத்தொழிலை செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

குறித்த தென்பகுதி மீனவர்கள் 6 மாதங்கள் மன்னாரிலும் ஏனைய 6 மாதங்கள் அவர்களுடைய ஊரிலும் கடற்தொழிலை செய்து வருகின்றனர்.

இவர்களுடைய அத்துமீறிய செயற்பாட்டினால் சின்னக்கடை, பெரிய கடை, சௌத்பார், பனங்கட்டிக்கோட்டு, எமிழ் நகர், சாந்திபுரம் உட்பட பல மீனவ கிராம மக்கள் பாதிப்படைந்து வருவதாகவும் மன்னார் பனங்கட்டிக்கோட்டு மீனவ சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# பரமர் சங்கமம்



"தன்வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்" என்பது பழமொழி தன்வினை தன்னைச் சுடுமெண்டது சரி அதென்ன ஓட்டப்பம் வீட்டைச்சுடுமெண்டது?

மக்களுக்கு விளங்காமல் இலக்கியங்கள் படைப்பது மலிஞ்சு போச்சு, இந்தக்காலத்தில எண்டால் அந்தக் காலங்களிலும் விளங்காத பழமொழியளையும் சொல்லித்தான் போந்துள்ளனர்.

சில வேளை ஒருகால பேச்சு வழக்கு மொழிகள் இன்னொரு காலத்தில் வழக்கழிந்து விடுவதனாலும் இந்நிலைமை ஏற்படலாம்.

அதுபோக பேசவந்த விசயத்துக்கு வாறன் எங்கட சனங்கள் தங்கட குற்றங்களை மற்றவர் மீது சுமத்துவது போலத்தான் தங்கட வீட்டுக் குப்பைகளையும் மற்றவேல சுமத்திவிடுகிறதில கெட்டிக்காரர்.

ஒருமுறை எங்கட வீட்டு வளவுக்கை பக்கத்து வீட்டுக்காரி குப்பையை அள்ளி வேலியால கொட்டினதை என்ர கண்ரெண்டாலையும் பாத்தன். அதுமட்டுமே பின் வளவைக் கூட்டப் போனால் போத்தல், ஓடு, பழைய தகரம், முட்டைக்கோது இப்படி எங்கட வீட்டால கழிக்கப்படாத பொருட்களெல்லாம் கண்டெடுக்கலாம்.

இதுபோலதான் விடிய முன்னம் குப்பை கூழங்களைக் கொண்டந்து பிரதான வீதிச்சந்திகளில் அமைந்துள்ள அழகான வீடுகளுக்கு முன்னால் போட்டு விட்டுப் போயிடுங்கள்.

வீடு, வாசலையும் வீட்டுக்கு முன்னால உள்ள வீதிகளையும் துப்புரவாக வைச்சுக் கொண்டிருக்கிற சனங்களுக்கு எப்படி இருக்கும்,

ஒரு தடவை யாழ்.கே.கே.எஸ்.வீதியால் நாச்சிமார் கோவிலைத் தாண்டி மதகடி எண்ட இடத்துக்கு சமீபமாக வரேக்க வீடொன்றில் மதில் சுவரில் எழுதி இருந்த வாசகத்தைக்கண்டன்.

"இது நாய்கள் குப்பை கொட்டும் இடம்" என்று மதில் சுவர் நீளத்திலும் நாலைந்து இடங்களில் எழுதப்பட்டிருந்தது. அந்த வீட்டுக்காரனின் பொறுமையின் எல்லையை அந்த வாசகங்கள் சுட்டிக் காட்டுகிறதல்லவா? பட்டுக் கோட்டையார் பாட்டெழுதின மாதிரி "திருடனாப் பாத்துத் திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" எண்டமாதிரித் தான் இந்த விவகாரமும்!

இதுமட்டுமா இரவு நேரங்களில் வீடுகளுக்குக் கல்லெறியிற கோஷ்டிகளும் இப்படித்தான் இருட்டடி குடுக்கிறேண்டு சொல்லுவினம். அந்த மாதிரி நடக்கிறதுகளை என்னெண்டு கண்டு பிடிக்கிறே!

ஆக்களை அடையாளம் கண்டால் 'இருட்டடி' எப்படி எண்டதை நாங்களும் காட்டலாம். சந்தேகப்பட்டு அப்பாவிகளைப் பாதிக்கக் கூடாதல்லோ?

இத்தகைய பேர்வழிகளால் நாடும், அந்த ஊரும் அயலும் கூட கெட்ட பேருக்குள்ளாவதைத் தவிர்க்க முடிவதில்லை, பட்டகாலில் படும் கெட்டகுடியே கெடும்; எண்டது போல ஒவ்வொருதரும் செய்யிற காரியங்களுக்கு பலனை எப்பவோ வாழ்நாளில் அனுபவித்தே தீருவினமெண்டது உண்மை.

அதைத்தான் தன் வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும் எண்டும் சொல்லி வைச்சினம் இல்லையே பின்ன...

# வெடிமருந்துகளுடன் சீன பிரஜை கைது

(கொழும்பு)

வெடிமருந்துகளை வைத்திருந்ததாகக் கூறப்படும் சீன பிரஜை ஒருவரை கொழும்பு துறைமுகத்திற்கு அப்பால் உள்ள கடலில் வைத்து கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். மீன்பிடிப் படகுடனேயே இவர் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ள்ளார்.

மொரிஷியஸ் நாட்டுக்குச் சொந்தமான இந்தப் படகை கடற்படையினர் சோதனையிட்ட போது, அதிலிருந்து எம் - 16 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்களையும் அதற்கு பயன்படுத்தப்படும் வெடிமருந்துகளையும் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# முரசின் இன்றைய பலன்

**(28.11.2012 - புதன்கிழமை)**

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி. நட்சத்திரம் கார்த்திகை பிற்பகல் 3.27 வரை. அமிர்த சித்தயோகம். திதி: பூரணை முன்னிரவு 8.25 வரை. இராகு காலம் 12.14 - 1.44 வரை. சுபநேரம் 4.44 - 6.14 வரை. எமகண்டம் 7.44 - 9.14 வரை, குளிகன் காலம் 10.44 - 12.14 வரை.

-பூரணை விரதம், சர்வாலய தீபம்-

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | மனதில் தன்மான உணர்வு. புதிய யுக்தியுடன் தடைகள் விலக்குவீர்கள். தொழில் வளர்ச்சி. சராசரி பணவரவு. தெய்வ வழிபாடு. குடும்பத்தில் மகிழ்ச்சி, ஒற்றுமை வளரும். |
| ரிஷபம் | சோம்பல் இருக்கும். நடைமுறை உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், சராசரி. கூடுதல் உழைப்பு தேவைப்படும். உறவினர் வகையில் செலவு. மாணவர்கள் தேர்ச்சி. |
| மிதுனம் | மனம் மகிழும் நிகழ்வுகள். பணியில் சுறுசுறுப்பு. உழைப்பு துணை நிற்கும். நல்லவர் உதவி. அறப்பணி ஈடுபாடு. உறவினர் வருகை. பணவரவும், நன்மையும். சுப நிகழ்ச்சி. |
| கடகம் | மதி நுட்பத்துடன் செயற்பட்டு மதிப்பு. உழைப்பிற்கான பலன் அதிகரிக்கும். தாராள பணவருமானம். சமூகத்தில் அந்தஸ்து. எதிர்பார்த்த சலுகைப் பயன். சொத்து சேர்க்கை. |
| சிம்மம் | எதிர் மனப்பாங்குடன் பேசுபவரிடம் விலகுக. தாமதம். தொழில், முன்னேற வாய்ப்பு. குறைந்த பணவரவு. உடல் நலத்தில் கவனம் அவசியம். பொறுமை எதிர்ப்பை வெல்லும். |
| கன்னி | கேட்ட உதவி வந்து சேரும். மனதில் கூடுதல் நம்பிக்கை. தொழில் எதிர்பார்த்த வளர்ச்சி. ஆதாய பணவரவு. வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். சேமிப்பீர்கள். ஆரோக்கியம். |
| துலாம் | ஆர்வமுடன் செயற்படுவீர்கள். பிறரிடம் மதிப்பு உயரும். பணிகள் திட்டமிட்டபடி நிறைவேறும். உபரி வருமானம். இல்லறத்துணை விரும்பியது தருவீர்கள். சுற்றுலா திட்டம். |
| விருச்சிகம் | செயல்களில் நேர்த்தி. புதியவர் அன்பு பாராட்டுவர். தொழில் வளர்ச்சியால் திருப்தி. எதிர்பார்த்த பணவரவு. புத்திரர் விரும்பியது தருவீர்கள். குடும்பத்தில் பாசம். வழிபாடு. |
| தனுசு | வெளிவட்டார தொந்தரவு இருக்[illegible]ம். பொறுப்புணர்வு அவசியம். தொழிலில் அளவான மூலதனம், அதிக உழைப்பு. சராசரி வரவு. எதிர்பார்த்த செய்தி தாமதம். உடல் கவனம். |
| மகரம் | தர்மசங்கடமான சூழல் ஏற்படலாம். மனச்சாட்சியுடன் செயற்படுவீர்கள். அதிக உழைப்பு. கொஞ்சம் பணக் கடன். போக்குவரத்தில் கவனம். தாயிடமிருந்து நம்பிக்கை. ஓய்வு தேவை. |
| கும்பம் | நண்பர்க்கு உதவுவீர்கள். தொழிலில் நடைமுறை மாற்றம். உபரி வருமானம். விருந்து உபசரிப்பு. அரச உதவி. பதவி உயர அனுகூலம். எதிலும் வெற்றி. யோகமான நாள். |
| மீனம் | உங்களை சிலர் பரிகாசம் செய்வர். பணிவால் வெல்வீர்கள். தொழிலில் புதிய யுக்தி. சராசரி பணவரவு. வீடு, வாகன திருத்தம். பயணத்திட்டத்தில் மாறுதல். மருத்துவச் செலவு. |

அடுத்து வரவேண்டிய எண்களை எழுதுக

1) 2 , 4, 6 , 8, ........., .........


2) 3 , 6, 9 , 12, ........., .........

3) 4 , 8, 12 , 16, ........., .........

4) 3, 5, 7, 9, ........., .........

5) 1 , 4, 9, 16, ........., .........

ஜெயக்குமாரின் பழக்கடையில் உள்ள பழங்கள் பின்வருமாறு வரைபு படுத்தப்பட்டது.




1. வாழைப்பழங்களின் எண்ணிக்கை யாது?
.....................................................................................

2) மிகக் கூடுதலாக உள்ள பழம் எது?
.....................................................................................

3) சம அளவில் காணப்படும் பழங்கள் எவை?
.....................................................................................

4) பப்பாசிப் பழத்தைவிடக் குறைவாக உள்ள பழங்கள் எவை?
.....................................................................................

5) மாம்பழம் அப்பிளைவிட எத்தனை அதிகமாகும்?
.....................................................................................

## தரம் 2-3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2012

# கல்வி முரசு

1 மணி



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) வாரத்தில் இறுதி நாள் - (திங்கள், ஞாயிறு, சனி)

2) 30 நாட்களைக் கொண்ட மாதம் - (பெப்ரவரி, மார்ச், ஏப்ரல்)

3) 144 ÷ 4 = ☐ பெட்டியில் வரவேண்டிய எண் - (26, 36, 16)

4) காசுத்தாளில் எத்தனை இடங்களில் பெறுமானம் எழுத்தில் எழுதப்பட்டிருக்கும்.
( 2, 3, 4)

5) லீப் வருடத்தில் உள்ள நாட்கள் - (365, 366, 364)

**சரியான விடைதருக**

6) வருடத்தில் 30 நாட்களைக் கொண்ட மாதங்கள் எவை?
.....................................................................................

2) திரவங்களை அளவிடப் பயன்படும் நியம அலகு எது?
.....................................................................................

3) நாட்கள் குறைந்த மாதம் எது?
.....................................................................................

4) உருளையின் வடிவத்தை ஒத்த பொருள் ஒன்றைக் குறிப்பிடுக.
.....................................................................................

5) எல்லாப் பக்கமும் சம அளவான வடிவம் எது?
.....................................................................................

**பின்வரும் அட்டவணையை நிரப்புக**

| இலக்கம் | எழுதக்கூடிய மூன்று எண்கள் | மிகப்பெரிய எண் | மிகச் சிறிய எண் |
|---|---|---|---|
| 547 | ..................... | ..................... | ..................... |
| 294 | ..................... | ..................... | ..................... |

**வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய எண்களை நிரப்புக.**

1) 44 + 54 = ____ 2) 75 + ☐ = 98 3) ☐ + 19 = 85 4) 49 + ☐ = 104 5) ☐ + 75 = 92

1) 94 − 29 = ____ 2) 73 − ☐ = 28 3) 101 − ☐ = 77 4) 83 − ☐ = 37 5) ☐ − 39 = 46

1) 72 × 2 = ____ 2) 49 × 3 = ____ 3) 64 × 4 = ____ 4) 53 × 5 = ____ 5) 75 × 10 = ____

1) 2⟌36 2) 2⟌44 3) 3⟌27 4) 4⟌48 5) 5⟌65

**பெறப்படும் எண்களை எழுதுக.**

1) 200 + 50 + 3 =

2) 500 + 0 + 11 =

3) 700 + 3 + 26 =

4) 250 + 25 + 1 =

5) 168 + 32 + 5 =

**கட்டங்களை பூர்த்தி செய்யுங்கள்**

| X | 7 | 8 | 4 | 5 | 1 | 2 | 4 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | | |

## November

| Mon | Tue | Wed | Thu | Fri | Sat | Sun |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | (13) | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | (27) | 28 | 29 | 30 | | |

1. இது எந்த மாதத்திற்குரிய நாட்காட்டி?
.....................................

2) இதில் எத்தனை செவ்வாய்க்கிழமைகள் உண்டு?
.....................................


3) 15 ஆம் திகதி என்ன கிழமை?
.....................................

4) இதில் வந்த வெள்ளிக்கிழமைகளில் உள்ள திகதிகள் எவை?
.....................................


5) இதில் இரு திகதிகள் வட்டமிடப்பட்டிருப்பதன் நோக்கம் யாது?
.....................................

**நேரத்தைக் குறித்துக் காட்டுக**

1) 11.30



2) 9.40



**இடைவெளி நிரப்புக**

1) 2 m = ........................ cm

2) 2 L = ........................ ml

3) 1.5 mm : ........................ cm

4) 2 km : ........................ m

5) 1.25 m : ........................ cm

சிறிதரன் பல்பொருள் வாணிபத்தின் விலைப்பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு கீழே கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

| பொருட்கள் | அளவு | விலை (ரூபா) |
|---|---|---|
| மா | 1 Kg | 75.00 |
| சீனி | 1 Kg | 90.00 |
| அங்கர் | 01 | 270.00 |
| அரிசி | 1 Kg | 60.00 |
| கடலை | 1 Kg | 85.00 |
| பருப்பு | 1 Kg | 90.00 |
| சன்லைட் | 01 | 37.00 |
| லக்ஸ் | 01 | 42.00 |
| தேங்காய் | 01 | 50.00 |
| முட்டை | 01 | 15.00 |

செந்தில் என்பவர் இக்கடையில் பொருட்களை வாங்கியபோது சிறிதரன் ஒரு விற்பனைச் சிட்டையைத் தயாரித்தார். மேலுள்ள விலைப்பட்டியலுக்கு ஏற்ற வகையில் விற்பனைச் சிட்டையை நிரப்புக.

| பொருட்கள் | அளவு | விலை (ரூபா) |
|---|---|---|
| மா | 5 Kg | |
| சீனி | 3 Kg | |
| அங்கர் | 05 | |
| அரிசி | 2 1/2 Kg | |
| கடலை | 1 1/2 Kg | |
| பருப்பு | 2 Kg. | |
| சன்லைட் | 10 | |
| லக்ஸ் | 10 | |
| தேங்காய் | 05 | |
| முட்டை | 20 | |
| | மொத்தம் | |

# சிவாஜி பார்க்கை கைப்பற்றுவோம்! சிவசேனாவின் அறிவிப்பால் சர்ச்சை

(மும்பை)


சிவசேனா கட்சித் தலைவர், மறைந்த, பால் தாக்கரேக்கு, மும்பை சிவாஜி பார்க்கில் நினைவிடம் கட்ட மாநிலத்தை ஆளும் காங்கிரஸ் அரசு சம்மதிக்கவில்லை என்றால் அந்த இடத்தை சிவசேனா கைப்பற்றும், என சிவசேனா மூத்த தலைவரும், லோக்சபா, முன்னாள் சபாநாயகருமான, மனோகர் ஜோஷி எச்சரித்துள்ளார். முக்கிய இடம்மகாராஷ்டிரா மாநில முன்னணி தலைவர்களில் ஒருவராகவும், தலைநகர் மும்பையின், அசைக்க முடியாத அரசியல் சக்தியாகவும் விளங்கிய, சிவசேனா தலைவர், பால் தாக்கரே, கடந்த, 17ஆம் திகதி, காலமானார். அவர் உடல், மும்பை, சிவாஜி பார்க்கில் தகனம் செய்யப்பட்டது. அந்த இடத்தின் அருகில் தான், சிவசேனா கட்சி தலைமையகம் உள்ளது. அந்த மைதானத்தில் தான், பால் தாக்கரே பேசுவது வழக்கம் என்பதால், சிவாஜி பார்க், சிவசேனாவினரின் முக்கிய இடமாக விளங்குகிறது. பால் தாக்கரேக்கு, சிவாஜி பார்க்கில் நினைவிடம் அமைக்க அனுமதிக்க வேண்டும் என, மாநில அரசை, சிவசேனா கேட்டுக் கொண்டுள்ளது.

ஆனால், மகாராஷ்டிராவை ஆளும், காங்கிரஸ் - தேசியவாத காங்கிரஸ் கூட்டணி அரசு, சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வோம் எனக் கூறி, சிவாஜி பார்க்கில் பால் தாக்கரே நினைவிடம் அமைப்பது குறித்து, எந்த உறுதிமொழியும் அளிக்காமல் உள்ளது.

இதனால், கோபமடைந்த சிவசேனா மூத்த தலைவரும், லோக்சபா முன்னாள் சபாநாயகருமான, மனோகர் ஜோஷி, அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். சிவாஜி பார்க்கில், தாக்கரே



நினைவிடம் அமைக்க அரசு அனுமதி அளிக்கவில்லை என்றால், அந்த இடத்தை சிவசேனா கைப்பற்றும், என்றார்.




# போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் துப்பாக்கிச்சூடு

எல்லைப் பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் துப்பாக்கிச்சூடு நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தியா- பாகிஸ்தான் இடையே கடந்த 2003ஆம் ஆண்டு முதல் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது.

எனினும் பாகிஸ்தான் அத்துமீறி இந்திய நிலைகள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

நேற்று முன்தினம் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் பூஞ்ச் மாவட்டத்தில் இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் படையினர் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இயந்திர துப்பாக்கிகள் மற்றும் கனரக ஆயுதங்களை பயன்படுத்தி 6 ஆயிரம் தடவைகள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக இராணுவ செய்தி தொடர்பாளர் எஸ்.என். ஆச்சார்யா தெரிவித்தார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே கடந்த 2003ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

இதன் 9ஆம் ஆண்டு தினம் நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்ட நேரத்தில் பாகிஸ்தான் அத்துமீறியுள்ளது குறிப்பிடத்தக்கது.




# 15 தீவிரவாதிகள் மீதான குற்றச்சாட்டுகள் வாபஸ்

உத்தரபிரதேச சட்டசபைக்கு சில மாதங்களுக்கு முன்பு தேர்தல் நடந்தபோது, முஸ்லிம்கள் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாதி கட்சி அறிவித்தது.

இதன் காரணமாக சமாஜ்வாதி கட்சிக்கு முஸ்லிம்கள் வாக்கு கணிசமான அளவுக்கு கிடைத்தது.


தேர்தலில் சமாஜ்வாதி கட்சி வெற்றி பெற்றதால் முலாயம்சிங் யாதவின் மகன் அகிலேஷ் யாதவ் முதல் - மந்திரி பொறுப்பை ஏற்றார். தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அவர் 15 முஸ்லிம்கள் மீதான வழக்குகளை வாபஸ்பெற உத்தரவிட்டுள்ளார்.

இந்த 15 பேரும் பல்வேறு குண்டு வெடிப்புகள், சதி செயல்கள் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டவர்களாவார்கள். 43 பேர் கொடூரமாக கொல்லப்பட்ட வழக்குகள் இந்த 15 பேர் மீது சுமத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



15 பேரை விடுவிக்க கோரும் கடிதத்தை மாவட்ட நிர்வாகம் மற்றும் மாஜிஸ்ரேட்டுகளுக்கு உத்தரபிரதேச மாநில அரசின் சிறப்புச் செயலாளர் ராஜேந்திரகுமார் அனுப்பியுள்ளார். இதையடுத்து தீவிரவாத செயல்களில் ஈடுபட்ட 15 பேர் விடுதலையாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

# நித்தியானந்தா ஆசிரமத்தை கையகப்படுத்த இடைக்கால தடை




தமிழ்நாட்டில் திருவண்ணாமலையில் உள்ள நித்தியானந்தா ஆசிரமத்தை தமிழக இந்து அறநிலையத்துறை கையகப்படுத்த சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

மதுரை ஆதீன மடத்தின் இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்டிருந்த நித்தியானந்தாவை சமீபத்தில் அப்பதவியிலிருந்து ஆதீனம் அருணகிரி வெளியேற்றினார்.

இனி, ஆதீன மடத்திற்கும் நித்தியானந்தாவிற்கும் தொடர்பு இல்லை என உறுதியாக அறிவித்தார் ஆதீனம்.

தற்போது கர்நாடகா பிடதி ஆசிரமத்தில் இருக்கும் சுவாமி நித்தியானந்தா, வெளிநாடு சுற்றுப்பயணம் மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக அண்மையில் செய்திகள் வெளியானது.

இதற்கிடையே தமிழ்நாட்டில் திருவண்ணாமலையில் உள்ள நித்தியானந்தா ஆசிரமத்தை தமிழக இந்து அறநிலையத்துறை கையகப்படுத்த சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.



காஷ்மீரின் ஸ்ரீநகரில், மொகரத்தை முன்னிட்டு படமுல்லா பகுதியில் ஊர்வலம் செல்ல, பொலிஸார் தடை விதித்திருந்தனர். இதைக்கண்டித்து, பொலிஸ் வாகனங்கள் மீது இளைஞர்கள் தாக்குதல் நடத்தினர்.

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## அறிவியலும்...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போதுதான் மாற்றுச் சித்தாந்தம் பற்றி யோசிக்கத் தேவையேற்படும். இதைத் தினந்தோறும் அறிவியல் பழகிவரும் (ஆண்டாள் பொறுத்துக்கொண்டால்: "உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும், அறிவியலே" என்று பழகிவரும்) விஞ்ஞானிகள் அறிந்திருப்பவர்களே. அவர்கள் "சந்தை அறிவியல்" கூவி விற்பதை எல்லாம் உடனடியாக ஏற்றுக்கொண்டு "அப்படியே சாப்பிட மாட்டார்கள்".

எந்த அறிவியல் கருத்தும் பொய்யாக்கத்திற்கு (falsification) உட்பட்டது. இது அறிவியல் சிந்தையின் முக்கியமான அங்கம். தனிச்சிறப்பும். ஊடகமும் அதன் மிகையும் தோன்றாக் காலந்தொட்டே, அறிவியல் இப்படித்தான் இயங்குகிறது. இயங்கவேண்டும். இப்படி பொய்யாக்க முடியாத கருதுகோள்கள், அறிவியல் பிடிமானம் இருந்தாலும், சரி தவறு என்று நிரூபிக்க முடியாததால் (சோதித்துப் பார்க்க அவ்வகைக் கூறுகளே இல்லாததினால்), சித்தாந்தமாய் சிலகாலம் சிலிர்த்துவிட்டுச் சிதிலமடைந்துவிடும்.

இயற்கையைத் தெளிந்துணர அறிவியல் ஒரு அறிதல்முறை மட்டுமே, அது ஒரு கட்டமைப்பு மட்டுமே என்பதுபோல் ஒரு கற்பிதம். மற்ற அறிதல் முறைகளிலிருந்து முக்கியமான வேறுபாடு, அறிவியல் பொய்யாக்கத்திற்கு உட்பட்டது. மாற்றுச் சித்தாந்தத்திற்கும், முடிவுகளுக்கும் ஏற்ப தன் அறிதல்களை புதுப்பித்துப் பகுத்துக் கொள்ளும், தொகுத்துக் கொள்ளும்.

சந்தை அறிவியல் அனைத்தும் சிந்தை அறிவியல் ஆகா.

# ஜனாதிபதிக்கு எதிராக நீதிபதிகள் போராட்டம்



(கெய்ரோ)
போராட்டம் நடத்தி வரும், நீதிபதிகளை சமாதானப்படுத்த, எகிப்து அரசு, பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.எகிப்து நாட்டை, ஹோஸ்னி முபாரக், கிட்டத்தட்ட, 30 ஆண்டுகளாக ஆட்சி செய்தார். இவரது குடும்ப ஆட்சியை எதிர்த்து, மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். இதன் விளைவாக, முபாரக், ஆட்சியிலிருந்து இறக்கப்பட்டார். ஜனநாயக முறைப்படி நடத்தப்பட்ட தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவ கட்சியின் தலைவர், முகமது முர்சி, அதி பராக தேர்வு செய்யப்பட்டார்.

முர்சி, அதிபரானது முதல், நீதித் துறைக்கும், இவரது ஆட்சிக்கும் மோதல் ஏற்பட்டு வருகிறது. இடைக்கால இராணுவ ஆட்சியின் போது நடந்த தேர்தலில், முறைக்கேடு நடந்ததாகக் கூறி, அந்நாட்டு நீதிமன்றம் நாடாளுமன்றத்தைக் கலைத்தது.

ஆனால், அதிபர் முர்சி, இந்த நாடாளுமன்றம் மீண்டும் செயற்படும் என, உத்தரவிட்டார். இதனால், அதிபர் மீது, நீதிபதிகள் அதிருப்தி அடைந்தனர்.

இந்நிலையில், தனக்கு எல்லையற்ற அதிகாரம் அளிக்க, வழி செய்யும், அரசியல் சாசனத்தை முர்சி, கடந்த வாரம் வெளியிட்டார். தனி நபரிடம் அதிகாரம் குவிந்தால், மீண்டும் சர்வாதிகார ஆட்சி தான் நடக்கும் என, எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

அதிபரின் இந்த அறிவிப்புக்கு எதிராக, எகிப்து நாட்டின் நீதிபதிகள் சங்கம், காலவரையற்ற வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. நீதிபதிகளை சமாதானப்படுத்தும் முயற்சியில், சட்டத்துறை அமைசசர், அகமது மெக்கி ஈடுபட்டுள்ளார். அதிபரின் அறிவிப்பு தற்காலிகமானது தான் என, அவர் தெரிவித்துள்ளார்.

# 30 கைதிகள் தப்பியோட்டம்



(அபுஜா)
நைஜிரீயாவில் பொலிஸ் தலைமையகத்திற்குள் துப்பாக்கியுடன் புகுந்த இருமர்ம நபர்கள் நடத்திய தாக்குதலில் சிறையில் இருந்த 30 கைதிகள் தப்பியோடினர்.இதில் இருபொலிஸ் அதிகாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.ஆபிரிக்கநாடான நைஜிரீயாவின் தலைநகர் அபுஜாவில் பொலிஸ் தலைமையகம் உள்ளது. இங்கு இருமர்ம நபர்கள் துப்பாக்கியுடன் திடீர் தாக்குதல்நடத்தினர். இதில் 2 பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலை பயன்படுத்தி இங்குள்ள சிறையில் 30 கைதிகள் தப்பியோடினர். இவர்கள் அந்நாட்டின் போக்கோ ஹராம் என்ற பயங்கரவாத அமைப்பினைச் சேர்ந்தவர்கள் என கூறப்படுகிறது. இதில் 25 பேர் பிடிப்பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கினறன.

# தொழிற்சாலையில் 14பேர் கருகிப்பலி

ஜெர்மனியில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 14பேர் உடல் கருகிப்பலியாயினர்.ஜெர்மனியின் தென்மேற்கே , உள்ள ஒரு தொழிற்சாலையில் திடீரென தீவிபத்து ஏற்பட்டது. அப்போது அங்கு பணியாற்றிய 14 பேர் உடல் கருகிபலியாயினர். இவர்கள் மாற்றுத்திறனாளிகள் என பொலிஸார் தெரிவித்தனர். 100-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். தீவிபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடக்கிறது.

உலகச் செய்திகள்

# செவ்வாய் கிரகத்தில் புழுதிப் புயல்



செவ்வாய் கிரகத்தில் புழுதிப்புயல் ஏற்பட்டுள்ளதை கியூரியாசிட்டி விண்கலம் படம் பிடித்து அனுப்பி உள்ளது.

சூரியக் குடும்பதை சேர்ந்த செவ்வாய் கிரகம் பூமியிலிருந்து 57 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இந்த கிரகத்தில் மனிதர்கள் வாழ்வதற்கான சூழல் உள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்வதற்காக அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக ஆய்வு நடத்தினர்.

இதுதொடர்பாக மேலும் ஆராய்ச்சி செய்வதற்காக கடந்தாண்டு நவம்பர் மாதம் ரோவர் விண்கலம் செலுத்தப்பட்டது.

இந்த விண்கலத்துடன் இணைக்கப்பட்டிருந்த கியூரியாசிட்டி என்ற ரோபோ வாகனம் செவ்வாய் கிரகத்தின் சுற்றுச்சூழல், மண் அமைப்பு உள்ளிட்டவை குறித்து ஆய்வு நடத்தி வருகிறது.

இந்நிலையில் செவ்வாய் கிரகத்தில் கடந்த 10ஆம் திகதி ஏற்பட்ட புழுதிபுயலை பதிவு செய்து படம் பிடித்து அனுப்பி உள்ளது. இப்படத்தை நாசா விஞ்ஞானிகள் தற்போது வெளியிட்டுள்ளனர்.

# பத்திரிகையாளரை கொலை செய்ய தலிபான்கள் சதித்திட்டம்



பாகிஸ்தானின் மூத்த பத்திரிக்கையாளரான ஹமீத் மீரை கொலை செய்ய தலி பான்கள் தீட்டிய சதித்திட்டம் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளது..

பாகிஸ்தானின் ஜியோ தொலைக் காட்சியில் ஹமீத் மீர் பணியாற்றி வருகிறார்.

இவர் நேற்று முன்தினம் காலை இஸ்லாமாபாத்தில் சந்தைக்கு சென்று விட்டு திரும்பி வந்த போது, காருக்கு அடியில் வெடிகுண்டு இருந்தது.


இதை பார்த்த அவரது சாரதி உடனடியாக பொலிஸாருக்கு தகவல் அளிக்கவே, வெடி குண்டு நிபுணர்கள் விரைந்து வந்த வெடிகுண்டை செயல் இழக்க செய்தனர்.

தலிபான்களுக்கு எதிராகவும், மலாலாவுக்கு ஆதரவாகவும் பேசியதால் இவரைக் கொலை செய்ய திட்டமிட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து ஹமீத் மீர் கூறுகையில், உண்மையைப் பேசக் கூடாது என்ற நோக்கத்தில் என்னைக் கொல்ல முயற்சி நடந்துள்ளது. ஆனால், இதுபோன்ற செயல்களால் என்னை ஒடுக்கி விட முடியாது என்று தலிபான்களுக்கு சவால் விடுத்துள்ளார்.

அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனை பேட்டி கண்ட பத்திரிக்கையாளர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இருமல் மருந்து குடித்த 13பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானின் லாகூரில் உள்ள மருந்து கடையில் இருமல் மருந்து வாங்கிக் குடித்த 13 பேர் பரிதாபமாக பலியாகினர். சாதாரணமாகவே இருமல் மருந்தில் சிறிது மயக்கத்தன்மை இருப்பதுண்டு. போதையை ஏற்படுத்தும் அளவுக்கு அதிக மயக்கத் தன்மை வாய்ந்த மருந்துகளை பாகிஸ்தானியர்கள் சிலர், சந்தோஷத்திற்காக உபயோகிக்கின்றனர்.

இந்த விசேஷ இருமல் மருந்துகள், பாகிஸ்தானில் உள்ள குறிப்பிட்ட சில கடைகளில் கிடைக்கின்றது. கடந்த 3 நாட்களில் இந்த மருந்தை வாங்கிக் குடித்த 13 பேர் லாகூர் நகரில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் 5 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

# எகிப்தில் தற்காலிகமாகவே ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரம்



எகிப்தில் ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரம் தற்காலிகமானது தான் என ஜனாதிபதி முகமது முர்சி தெரிவித்துள்ளார்.

எகிப்து ஜனாதிபதி முகமது முர்சி சமீபத்தில் வெளியிட்ட பிரகடனத்தின் மூலம், ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நீதித்துறையும் கட்டுப்படுத்த இயலாது என்பது போல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன. மேலும் சகோதரத்துவ கட்சி அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இஸ்லாம் பாத்தி மசூத் என்பவர் உயிரிழந்தார், 60 பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதி முகமது முர்சி, விலகிச் செல்லும் ஜனநாயக பாதையை மீட்டெடுக்கவே, கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது தற்காலிகமானது தான். புதிய அரசமைப்புச் சட் டத்தை உருவாக்குவதற் கான ஆலோசனையில் அரசு ஈடுபட்டு வருகிறது. இதில் எதிர்க் கட்சிகளின் உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# ஹொங்கொங்கில் பிரசவத்தின் போது கணவன்மார்களுக்கு 3 நாள் விடுமுறை



ஹொங்கொங்கில் மனைவியின் பிரசவத்தின் போது கணவன்மார்கள் மூன்று நாள் விடுப்பு எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக பிரிட்டனின் கட்டுப்பாட்டில் இருந்த ஹொங்கொங் தற்போது சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் மனைவியை கவனித்து கொள்ளும் பொருட்டு ஆண்களுக்கு இரண்டு வாரம் விடுப்பு வழங்கப்படுகிறது.

இந்த நடைமுறை ஹொங்கொங்கிலும் ஓரளவுக்கு பின்பற்றப்படுகிறது. மனைவியின் பிரசவத்தின் போது அரசாங்கத்தில் பணிபுரியும் ஆண்களுக்கு ஐந்து நாள் விடுப்பு அளிக்கப்படுகிறது.

ஆனால் தனியார் நிறுவன் ஊழியர்களுக்கு இந்த சலுகை கிடையாது. தற்போது இவர்களுக்கும் மனைவியின் பிரசவத்தின் போது, மூன்று நாள் விடுப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதல் குழந்தையின் பிரசவத்தின் போது மட்டும் இந்த விடுப்பு வழங்கப்பட்டுள்ளது.

# ஆண்துணையின்றி எல்லை கடக்கும் பெண்கள் குறித்து கணவருக்கு தகவல்


ஆண் துணை இல்லாமல், நாட்டின் எல்லையை கடக்கும், பெண்கள் குறித்து, அவரவர் கணவருக்கு, தொலைபேசியில் தகவல் அளிக்கும் நடைமுறையை, சவுதி அரசு பின்பற்றி வருகிறது.சவுதி அரேபியாவில், இஸ்லாமிய சட்டங்கள் தீவிரமாக பின்பற்றப் படுகின்றன. அந்நாட்டு பெண்களுக்கு, கார் ஓட்டுவதற்கு அனுமதி கிடையாது தேர்தலில் போட்டியிடவும் உரிமையில்லாமல் இருந்தது. தற்போது, சில நிபந்தனைகள் விதித்து, தேர்தலில் நிற்க பெண்களுக்கு, ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

சவுதி பெண்கள், ஆண் துணையில்லாமல், அந்நாட்டு எல்லையை கடக்கக் கூடாது என்ற நடைமுறை உள்ளது. இந்த நடைமுறையை, அந்நாட்டு அரசு, தற்போது கடைபிடித்து வருகிறது.

சவுதி அரசின் இந்த நடவடிக்கைக்கு, பெண் உரிமை அமைப்புகள், கண்டனம் தெரிவித்துள்ளன.

# அபிவிருத்திக்குத் தடைபோடுபவர்கள் யார்? விழிப்புடன் செயற்படக் கோருகிறார்

## வலி. கிழக்கு எதிர்க்கட்சித் தலைவர்



(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்திக்குத் தடையாக இருப்பவர்கள் யார் என்றும் இவ் விடயத்தில் பொதுமக்கள் விழிப புடன் செயற்பட வேண்டும் என்றும் வலி. கிழக்குப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் இ.ஐங்கரன் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

வலி. கிழக்கு பிரதேச சபையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விசேட கூட்டத்தில் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமாருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் இராமநாதன் ஐங்கரனுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

தவிசாளர் சபையில் ஆளணியினை நிரப்புவதற்கு உள்ளூராட்சித் திணைக்களத்தின் சட்ட திட்டங்களிற்கு ஏற்ற வகையில் ஆளணி நிரப்பப்படவில்லை. உள்ளூராட்சித் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தினை தவிசாளர் சபைக்குமறைத்தன் விளைவே ஊழியர்களின் சம்பளத்தை நிறுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இது தொடர்பாக சபையின் அனுமதியைப் பெறாது நீதிமன்றத்தில் எவ்வாறு வழக்குதாக்கல் செய்ய முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் இராமநாதன் ஜங்கரன் கேள்வி எழுப்பியதுடன், கடந்த 28.09.2012 நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நெல்சிப் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 70 மில்லியன் ரூபா நிதியில் வீதியினைப் புனரமைக்குமாறும் கோரியிருந்தார்.

அதற்கு தவிசாளர் இந்த வருடம் கடைத் தொகுதிதான் கட்டுவோம் என தெரிவித்திருந்தார். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் இராமநாதன் ஜங்கரன்

வீதியா?

கடைத்தொகுதியா?

என்ற திட்டத்தினை வாக்கெடுப்பிற்கு விடுமாறு கோரியதற்கு அதனை ஏற்றுக்கொண்டு தவிசாளர் வாக்கெடுப்பிற்கு விட்ட போது கடைத்தொகுதி கட்டுவதற்கு 5 பேரும், வீதி புனரமைப்பதற்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் 9 பேரும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 5 பேரும் ஆதரவளித்திருந்தனர். இருந்தும் அதனை ஏற்றுக்கொள்ளாத தவிசாளர் தனது சக உறுப்பினர்களிற்கு விளங்கப்படுத்துவதாக தெரிவித்ததுடன், வருகின்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கடைத்தொகுதிக்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்வேன் எனத் தெரிவித்தார்.

மேற்படி விடயம் வாக்கெடுப்பிற்கு விட்டபோது கடைத் தொகுதி கட்டுவதற்கு 4 பேரும், வீதி புனரமைப்பதற்கு உப தவிசாளர், ஆளும்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 12 பேரும் முழுமையாக ஆதரவு தெரிவித்திருந்தனர்.

அதேவேளை, இந்த வருடமும் ஐந்து வீதிகள் புனரமைப்பதற்காக 70 மிலலியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது, அதற்கு எங்களுடைய அதிமேதகு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோருக்கும் எனது வலி. கிழக்கு பிரதேச மக்கள் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும்,

வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளரை பிரதேச சபையின் சட்ட திட்டங்களை சபைக்கு எடுத்து கூறுவதற்கு தவிசாளர் அனுமதி மறுப்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

அதேவேளை ஆளும் கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி அவர்களுடைய கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு அனுமதியினை சபையின் தவிசாளர் மறுப்பது உறுப்பினர்களின் உரிமையை மறுக்கின்ற செயற்பாடகும் என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# பெண்ணின் சடலம் மீட்பு

வத்தளை - முத்துராஜ மாவத்தை பிரதேசத்தில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் கூரிய ஆயுதத்தால் கழுத்து வெட்டப்பட்டே கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக குறித்த பெண் தமது கணவரால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தாயாரான 44 வயதான பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் தற்போது தலை மறைவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# வீடு தீக்கிரை

காரைநகர் பிரதேச சபைத் தலைவரின் காரைநகரில் உள்ள வீடு தீயில் எரிந்து சேதமடைந்துள்ளது. இத் தீ விபத்திற்கு விசமிகளின் நாசவேலை காரணமா என்று உறுதிசெய்ய முடியாமல் உள்ளது.

காரைநகர் கசூரினா பீச் சந்தியிலுள்ள காரைநகர் பிரதேச சபைத் தலைவரான வேலாயுதம் ஆனைமுகன் என்பவரின் வீடே நேற்று இரவு 8.30 மணியளவில் தீப்பிடித்து எரிந்துள்ளது.

# ஆஸி. பாலியல் குற்றவாளி இலங்கையில் தலைமறைவு

அவுஸ்ரேலியாவில் 252 சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அந்த நாட்டு பிரஜை தொடர்பில் இலங்கையின் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கவனம் செலுத்தியுள்ளது. இந்தநிலையில் இலங்கையின் மத்திய மலைநாட்டு தேயிலை பெருந்தோட்டம் ஒன்றில் வசிப்பதாக நம்பபடும் பேனாட் மெக்ராத் என்ற இந்த அவுஸ்ரேலியர் தொடர்பில் தகவல்களைத் திரட்டித் தருமாறு சிறுவர் அதிகாரசபை குற்றப்புலனாய்வு பிரிவினரைக் கோரியுள்ளது.

மெக்ராத், தாம் நாடு கடத்தப்படும் ஆபத்தில் இருந்து தப்பிக் கொள்வதற்காக இந்த வருட ஆரம்பத்தில் நியூஸிலாந்தில் இருந்து இலங்கைக்குத் தப்பிவந்துள்ளார். 1970 முதல் 80 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தாம், அவுஸ்ரேலியாவில் நடத்தி வந்த நிறுவனத்தில் வைத்து 252 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களில் ஈடுபட்டார் என்று மெக்ராத் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# மருத்துவ சேவைக்காக ஏங்கும் வடமராட்சி கிழக்கு மக்கள்

கடந்த வருடம் தொடக்கம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள அம்பன் பிரதேச மருத்துவமனையின் சேவையை கிரமமாக வழங்குமாறு அந்தப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தற்போது ஒன்றுவிட்ட தினங்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை இந்த வைத்தியசாலையில் சேவைகள் இடம்பெறுகின்றன.

மிகுதி இடை நாட்களில் ஊழியர்கள் தொண்டைமானாறு மருததுவமனைக்கு 12.00 மணியிலிருந்து கடமைக்காக செல்கின்றனர்.

இதனால் நாகர்கோவில், அம்பன், குடத்தனை ஆகிய கிராம மக்கள் சுமார் 12 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த வைத்தியசாலைக்கு 24 மணி நேரமும் சேவையை பெற்றுக கொள்ளக் கூடிய வகையில் நிரந்தர மருத்துவரையும் குடும்ப நல உத்தியோகத்தரையும் நியமித்து தருமாறு இந்த பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## விண்வெளி...

செயற்கைக்கோள், சீனாவின் காலநிலை சீரின்மை மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி காரணமாக ஐந்து நாட்களுக்கு பிற்போடப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே நேற்றையதினம் இந்தச் செயற்கைக்கோள் விணணுக்கு ஏவப்பட்டது என்றும் அந் நிறுவனம் மேலும் கூறியது.

## சரவணபவன்...

கற்கள் வீசப்பட்டன. வீதித் திருத்தத்துக்காகப் பறிக்கப்பட்ட கற்கள் மாணவர் விடுதி நோக்கி சரமாரியாக வீசி எறியப்பட்டன.

நிலைமையை அவதானிப்பதற்காக அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினரான சரவணபவன் மீதும் கல் வீச்சுத்தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இரவு 9.00 மணியைத் தாண்டிய பின்னரும் அப்பகுதியில் பதட்டம் நீடித்தது.

## கூட்டமைப்பு...

பி.பி.சி. செவ்வியில் தமிழ்ப் பெண்கள் பாலியல் தொல்லைகள் காரணமாக இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியதாக தான் கூறியதாக தன்னை விசாரித்தவர்கள் தன்னைக் கேட்டதாகவும், ஆனால் தான் அப்படி அந்தச் செவ்வியில் கூறவில்லை என்று அவர்களுக்கு விளக்கியதாகவும் அவர் கூறினார்.

## மொழி...

தீர்வு வழங்கும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. அனைத்து அரச நிறுவனங்களிலும் தமது தாய் மொழியில் கடமையாற்றும் போது ஏற்படும் சிக்கல்களை மொழி அழைப்பு மத்திய நிலையத்தின் 1956 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தீர்த்துக் கொள்ளமுடியும். அமைக்கப்பட்டுள்ள புதிய மொழி அழைப்பு மத்திய நிலையம் தொழிநுட்ப ரீதியில் உயர்ந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுவான...

பட்டுள்ள இந்த இணைப்பு முறையானது 2013 முதல் அறிமுகப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் குறைந்த செலவில் வாடிக்கையாளர்கள் தமது நிதித்தேவைகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய வசதி ஏற்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## வங்கக் கடலில்...

வங்கக் கடலில் இலங்கைக்கு கிழக்கே குறைந்த தாழமுக்கம் உருவாகியுள்ளது. இதன் காரணமாக தென் தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. பலமான கடல் காற்று வடகிழக்கு மற்றும் கிழக்குத் திசையில் இருந்து மணிக்கு 45 மணி முதல் 55 கிலோமீட்டர் வேகத்தில் தென் தமிழகக் கடலோரப் பகுதிகளில் வீசக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது.

## இன்று...

சந்திரனின் பிரகாசம் மாத்திரமே குறைவடையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பகுதி அளவிலான சந்திர கிரகணம் அல்லது பூரண சந் திரகிரகணத்தைப் போன்று சந்திரனின் ஒரு பகுதியோ அல்லது முழுமையாகவோ மறைவதற்கான சாத்தியம் "இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இரவு 7.30 தொடக்கம் 8.30 வரை சந்திரனின் பிரகாசம் குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடியும் என அவர் மேலும கூறியுள்ளார்.

## ஐ.நா.வை...

முற்பகல் 10.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்தார். அவரை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வரவேற்று அழைத்துச் சென்றதுடன் ஆயர் இல்லத்தில் சுமார் 30 நிமிடநேரம் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிக்கும் ஆயரிற்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்புக் குறித்து ஆயர் தெரிவிக்கையில், 2009 ஆம ஆண்டு யுத்தத்தின் இறுதிக் காலப்பகுதியில் யுத்தப் பிரதேசத்தில் இருந்து ஐ.நா. அதிகாரிகளை இலங்கை அரசாங்கத்தின் நோக்கத்திற்குக் கட்டுப்பட்டு ஐக்கிய நாடுகள் சபை கொழும்புக்கு திருப்பியழைத்துக் கொண்டமை குறித்து கவலையை தாம் ஐ.நா. அதிகாரியிடம் தெரிவித்துக் கொண்டதாகவும் ஆயர் தெரிவித்தார். இதற்கு அவர் தமது தரப்பில் தவறுகள் நிகழ்ந்திருப்பதனை ஏற்றுக் கொண்டதுடன் இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வண்ணம் செயற்படவும் உறுதியளித்துள்ளதாக தெரிவித்த ஆயர், தமிழர்களது பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்துடன் தாம் பேசியிருப்பதாகவும் 2013 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையை அவர் வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் யுத்தம் நிறைவடைந்து மூன்று வருடங்கள் கடந்திருக்கின்ற நிலையில் மூன்று இலட்சம் மக்கள் அவரவர் பகுதிகளில் அரசாங்கத்தினால் மீள் குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர். இருந்தும் இந்த மக்களுக்கான வாழ்வாதார அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டிய நிலை தொடர்வதாகவும் ஐ.நா. அதிகாரிகளிடம் தெரிவித்த ஆயர் யுத்தப் பிரதேசங்களில் இருந்து 180 வீதமான வீடுகள் முற்றாக அழிவடைந்து போயிருப்பதாகவும், மீள்குடியேறிய மக்கள் தற்காலிக வீடுகளில் வசித்து வருவதாகவும் இவர்களுக்கு அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவி செய்து வருகின்றன. அதுவும் போதுமானதாக இல்லை. விவசாயம், மீன்பிடி என்பவற்றை மேற்கொள்ள உதவிகள் தேவையாகவுள்ளது. இந்திய இழுவைப் படகுத் தொழிலால் இந்தப் பகுதியில் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. வடக்கிற் கான உள்ளூராட்சித் தேர்தலை அரசு பின்போட்டுள்ளது எனவும் தெரிவித்த ஆயர் தமிழர் பிரதேசங்களில் இராணுவக் குறைப்பு என்பது வெறும் கண்துடைப்பாகவே இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் தமிழ் மக்களுக்கு உறுதியான அரசியல் தீர்வு ஒன்றே தேவையாகவுள்ளது. அந்த வகையில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை அரசாங்கம் முன்வைக்க ஐக்கிய நாடுகள் சபை அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனவும் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஐ.நா. அதிகாரியிடம் தெரிவித்துள்ளார். (பா,இ,02)

# இருநாள் தொடர் மழையால் குளங்களின் நீர்மட்டம் உயர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கடந்த இரண்டு தினங்களாகப் பெய்த கன மழை காரணமாக மாவட்டத்தின் அனைத்துக் குளங்களின் நீர் மட்டமும் உயர்வடைந்துள்ளதோடு சில குளங்கள் வான்பாய்வதாக கிளிநொச்சி பிராந்திய நீர்ப்பாசனத்திணைக்களத்தின் பொறியியலாளர் விகிர்தன் தெரிவித்துள்ளார்.


கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தங்களுடைய மூன்று பிராந்தியங்களான இரணைமடு பிரதேசத்தில் 83.8 மி.மீ மழை வீழ்ச்சியும், அக்கராயன் பிரதேசத்தில் 108. 5மி.மீ மழை வீழ்ச்சியும், கரியாலை நாகபடுவான் பிரதேசத்தில் 78 மிமீ மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

இதேவேளை அக்கராயன் குளம் 22.2 அடியும், இரணைமடு குளம் 25.11 அடியும், கல்மடு குளம் 22.5 அடியும், பிரமந்தனாறு குளம் 12.6 அடியும், புதுமுறிப்பு குளம் 17.4 அடியும் கனகாம்பிகைக்குளம் 10.7 அடியும், வன்னேரிக்குளம் 9.9 அடியும், கரியாலை நாகபடுவான்குளம் 5.10 அடியும் என நீர் மட்டங்கள் உயர்ந்துள்ளன.

இவற்றில் புதுமுறிப்புகுளம், கனகாம்பிகை குளங்கள் வான் பாய்வதோடு வன்னேரிக்குளம் மற்றும் பிரமந்தனாறுகுளம் என்பனவும் வான்பாயும் நிலையில் இருக்கிறது.

தொடர்ந்தும் மழைபெய்து நீர்வரத்து இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அனைத்துகுளங்களின் நீர் மட்டங்களும் அதன் கொள்ளளவை அடைந்துவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (29)

# கைதடி மருத்துவமனைக்கு புதிய கட்டடம் அமைப்பு



(கைதடி)

கைதடியில் அமைந்துள்ள அரச மருத்துவமனைக்குரிய புதிய கட்டடம் புதுப்பொலிவுடன் அதே இடத்திற்கு அருகிலேயே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. தற்போது இயங்கும் கட்டடத்திலேயே பெருமளவான மக்கள் வைத்திய சேவையைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் முடிவுற்றதும் அரச மருத்துவமனை புதிய கட்டடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

இதேவேளை இந்த இடத்திற்கு முன்பக்கமாக வடமாகாண சபைக்குரிய பிரதான செயலகங்கள் அமையவுள்ள் மாடிக்கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (80)

# மாலினி மீது வழக்கு

வீட்டு வாடகை உரிய முறையில் செலுத்தவில்லை எனத் தெரிவித்து நடாளுமன்ற உறுப்பினர் மாலினி பொன்சேகாவிற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சுமார் 6 இலட்சம் ரூபா பணம இவ்வாறு செலுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. வீட்டு வாடகை செலுத்தாமை தொடர்பான வழக்கு விசாரணைகளுக்காக எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மாலினி பொன்சேகாவிற்கு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள வீடொன்றை வாடகைக்கு அமர்த்திய மாலினி பொன்சேகா, உரிய முறையில் வாடகைப் பணத்தைச் செலுத்தத் தவறியுள்ளதாக வீட்டு உரிமையாளர் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

வீட்டு வாடகையை செலுத்துமாறு எழுத்து மூலம் பல தடவைகள் கோரிய போதிலும், மாலினி பொன்சேகா அந்தக் கோரிக்கைகளுக்கு உரிய பதிலளிக்கத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

# அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளது

(கொழும்பு)

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதார்ண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நேற்று முன்தினம் இரவு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஐந்து இலட்சத்து 42 ஆயிரத்து 260 மாணவர்கள் இம்முறை பரீட்கைக்கு தோற்றவுள்ளதாகவும் இவர்களில் மூன்று இலட்சத்து 87 ஆயிரத்து 593 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் எனவும் எஞ்சியவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

நான்காயிரத்து 48 பரீட்சை நிலையங்களில் இம்முறை பரீட்சைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தர்சிலை கடத்தல்; பிரதேச சபை உறுப்பினர் கைது

பண்டைய புத்தர் சிலையொன்றுடன் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். 1300 ஆண்டுகள் பழமையான புத்தர் சிலையே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. கலகெதர பொலிஸார் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

பண்டையை சிலையை இரகசியமாக விற்பனை செய்ய குறித்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் முயற்சித்துள்ளார். மீகஹாகும்புர பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மாறுவேடம் தரித்து வர்த்தகர் ஒருவரைப் போன்று சென்று குறித்த சந்தேக நபரிடமிருந்து சிலையை பொலிஸார் மீட்டுள்ளனர். இந்தச் சிலையை 700,000 ரூபாவிற்கு விற்பனை செய்ய குறித்த பிரதேச சபை உறுப்பினர் முயற்சித்துள்ளார்.

# பாலியல் இலஞ்சம்; சுகாதார அமைச்சில் முறையீடு

பதவி உயர்வு வழங்குவதாக வாக்குறுதி அளித்து பெண்ணிடம் பாலியல் இலஞ்சம் பெற முயற்சித்த தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் குறித்து சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிற்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இந்த முறைப்பாடு நேற்று முன்தினம் அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் பெண்கள் அழுத்தங்களுக்கு உட்படுத்தப்படுவது குறித்து அண்மைக் காலங்களில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு மூன்று முறைப்பாடுகள் நேற்று சுகாதார அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள், கொடுமைகள், பிரச்சினைகள் குறித்து 0112-686393 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாடு செய்யலாம்.

கிழமை நாட்களில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.00 மணிவரை இத்தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு ஏற்படுத்த முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# இதுவரை 27 கப்பல்கள் அம்பாந்தோட்டைக்கு

(கொழும்பு)

2030 ஆம் ஆண்டளவில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் ஊடாக 159 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டுவதற்கு எதிர்பார்ப்பதாகத் துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதுவரை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு 27 கப்பல்கள் வந்துள்ளதாக பிரதி அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்தார்.

இதன் மூலம் 83 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# கடன் சுமையே மூவரைப் பலிகொண்டது

கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14 என்ற இடத்தில் உள்ள வீட்டில் இருந்து நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்ட மூன்று சடலங்கள் மீதான நீதவான் விசாரணை மற்றும் பிரேத பரிசோதனை என்பன நேற்று இடம்பெற்றன.

ஆமர் வீதி பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் கொழும்பு கிராண்ட்பாஸ், ஆமர் வீதியில் நேற்று முன்தினம் மாலை தாய், தந்தை, குழந்தை என மூவரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

சடலமாக மீட்கப்பட்டவர்கள் தலவாக்கலையைச் சேர்ந்த 38 வயது தந்தை சிவலிங்கம் ஸ்ரீகாந்தன், அவரது மனைவியான 24 வயதுடைய கோகிலவாணி மற்றும் அவர்களின் மகனான 2 வயதுடைய ஸ்ரீகாந்தன் சர்வேஸ் ஆகியோர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர்கள் தங்கியிருந்த வீட்டில் இருந்து கடிதம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாகவும் கடிதத்தில், கடன் சுமையே தமது தற்கொலைக்கு காரணம் என எழுதப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆமர் வீதி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறப்புற இடம்பெற்ற கார்த்திகை தீபவழிபாடுகள்

(வடமராட்சி)

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு கிழக்கில் இந்துக்கள் வாழும் பிரதேசங்களில் கார்த்திகை தீப வழிபாடுகள் நேற்று சிறப்புற இடம்பெற்றது.

வடமராட்சியின் பிரசித்திபெற்ற கோயில்களான தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம், பொலிகண்டி கல்யாண வைரவர் ஆலயம், நெல்லியடி முருகன் ஆலயம் உட்பட உள்ளூர் ஆலயங்கள் அனைத்திலும் குமராலய தீப வழிபாடு சிறப்புற இடம் பெற்றது.

இதேபோன்று நல்லூர் கந்தன் ஆலயம், கிளிநொச்சி முருகன் ஆலயம் ஆகியவற்றிலும் இந்த வழிபாடுகள் நேற்று சிறப்புற இடம்பெற்றது.

நேற்றுக் காலை முதல் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட மக்கள் மாலையில் குமரக் கடவுளுக்கு தீபங்களை ஏற்றி கார்த்திகைத் தீப வழிபாடுகளில் ஈடுபட்டனர். (116)

# நாடு திரும்பினார் பிரதமர்

(கொழும்பு)

பிரதமர் டி.எம்.ஜயரட்ன அமெரிக்காவலிருந்து நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சில வாரங்களாக பிரதமரும் பௌத்த சாசன அமைச்சருமான டி.எம்.ஜயரட்ன அமெரிக்க வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். பிரதமர் தற்போது குணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுகவீனம் காரணமாக இரண்டு தடவைகள் நாடாளுமன்றில் பிரதமருக்கு விடுமுறைக் காலம் நீடிக்கப்பட்டிருந்துது.

இதேவேளை, பிரதமரின் உடல் நிலையைக் கருத்திற் கொண்டு பதவிப் பொறுப்புக்களில் மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையின் மாணிக்கக் கல்லுக்கு அதிக கிராக்கி

(கொழும்பு)

இலங்கையின் இந்திர நீல மாணிக்கக் கல்லுக்கு உலக சந்தையில் அதிக விலை கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹொங்கொங் நகரில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற ஏலத்தில் இந்த மாணிக்கக் கல், கரட் ஒன்றுக்கு 36 ஆயிரம் அமெரிக்க டொலர் வீதம் கிடைக்கப் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த மாணிக்கக் கல் 43.16 கரட் எடை கொண்டது எனவும், 120 இலட்சத்து 84 ஆயிரம் ஹொங்கொங் டொலருக்கு விலை போயுள்ளது. இதனூடாக புதிய உலக சாதனையும் நிலைநாட்டப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் இலங்கையில் இருந்து பெறப்பட்ட மாணிக்க கல் ஒன்றே அதிக விலைக்கு விற்பனையானது என்ற சாதனையை இதுவரையிலும் கொண்டிருந்தது. அதனை இந்த மாணிக்கக் கல் முறியடித்துள்ளது.

புதிய உலக சாதனையை ஏற்படுத்தியுள்ள இந்த மாணிக்கக் கல்லை உள்ளடக்கிய மோதிரத்தை வடிவமைத்தவர், பிரித்தானிய அரச குடும்பத்தின் எலிசபெத் டெயிலர், உள்ளிட்ட

கிரேஸ் கெனி போன்ற ஹொலிவுட் நடிகைகளின் ஆபரண வடிவமைப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பதவி விலகினார் நகர சபை உறுப்பினர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் தனது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார். ஏறாவூர் நகர சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் கே.எல்.அக்கீல் அர்சாத் தனது நகர சபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஏறாவூர் நகர சபையின் கடந்த மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்காத நிலையிலிருந்த மேற்படி ஏறாவூர் நகர சபை உறுப்பினர் அக்கீல் அர்சாத் தனது இராஜினாமாக் கடிதத்தை நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளதாக ஏறாவூர் நகர சபைச் செயலாளர் எம்.எச்.எம்.ஹமீம் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.